

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 நளி நல்லோரை கார்த்திகைத் திங்கள் 11ம் நாள் நிறைமதி அன்று (27-11-2023 திங்கட்கிழமை) வெளியீடு +94 21 221 2739


## ஆறுமுகநாவலர் குருபூசை



நளி நல்லோரை கார்த்திகைத் திங்கள் 18ம் நாள் (04-12-2023) கார்த்திகை மகம் நாண்மீனின் ஆறுமுக நாவலர் குருபூசை நாள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் இடம்பெறும்.

# ஆதிரையான் அருள் பேசும் மார்கழிப் பெருவிழா யாழ். பல்கலைக்கழகத்தில் மார்கழி 9 (டிச 25) இடம்பெறும்



தேர் ஓடும் வீதியில் தேவர் குலத்தார் நாற்றிசையும் நிறைய, நிலவுலகெங்கும் நிறைந்த சிவபெருமானுடைய பழமையான புகழைப்பாடியும், ஆடியும் திரிகின்ற அருமைத் திங்களே மார்கழித் திங்கள் ஆகும். மார்கழித் திங்களானது விழாக்கள், நோன்புகள், வழிபாடுகள் என்று பத்தி நிறைந்ததாகும். மார்கழியானது திருவெம்பாவை, திருவாதிரை, ஆதிரை அருட்காட்சி, திருவாதிரைக் களி, திருப்பாவை, மார்கழிப் பெருவிழா என பல சிறப்புகளை கொண்டது.

சைவத்தமிழ் மக்கள் பலவாறு மார்கழியை கொண்டாடுகின்றனர். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மார்கழிப் பெருவிழாக்கள் நடத்தப்பட்ட போதும், ஈழத்திருநாட்டில் 2021ம் ஆண்டில் இருந்து தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக மார்கழிப் பெருவிழா எனும் கருத்தாக்கத்தில் சிவத்தின் மற்றும் சைவத்தின் பெருமைகளை திருமுறைகள் வழி எடுத்தியம்பும் பிரமாண்ட விழாவாக கொண்டாடி வருகின்றனர். இதற்கு மெருகூட்டும் வகையில் கடந்த ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறையுடன் சேர்ந்து பெருவிழாவாக நடைபெற்றது.

அதேபோல் இம்முறையும் மார்கழிப் பெருவிழாவை மார்கழித் திங்கள் 9 ஆம் நாள் (டிசம்பர் 25) திங்கட்கிழமை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடாத்தத் திருவருள் கூட்டியுள்ளது. 'யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சைவ சித்தாந்த துறையும் தென்னாடு செந்தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும் இணைந்து' முன்னெடுக்கப்போகும் இவ்விழாவிற்கு தமிழ்நாட்டில் இருந்து அரன்பணி அறக்கட்டளை நிறுவுனர் சிவ.பவானி அ. தியாகராசன் ஐயா அவர்கள் வருகைதர இருக்கிறார்கள்.

பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்காக இம்முறை மார்கழிப் பெருவிழாவானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில், "தில்லைக்கூத்தன் திருவம்பலம்" மற்றும் "சேக்கிழார் அரங்கம்" எனும் இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது. கண்ணுதற் பெரும் கடவுளும் கழகமொடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழை பறைசாற்றும் இப்பெரும் கைங்கரியத்தை சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு ஐம்பூதநாதர் அருள் புரிவாராக. மேலும் மார்கழியை சிறப்பிக்கும் திருவிழாவான இம்மார்கழிப் பெருவிழாவில் கலந்து கொண்டு, திருமுறைத்தேன் பருகி, தில்லைக்கூத்தனின் அருளுரைகள் கேட்டு, திருவருள் பெற்று உய்யுமாறு, அனைவரையும் மெய்யன்போடு அழைக்கின்றோம். ஆதிரையான் புகழ் கேட்க அனைவரும் அணிதிரண்டு வாரீர்.

**தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை**
**உண்ட பாலனை யழைத்ததும் எலும்புபெண் ணுருவாக்**
**கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்**
**தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்**

**திருச்சிற்றம்பலம்**

## திருவெம்பாவையும் நிறைவும் ஆதிரை அருட்காட்சியும் இம்முறை மார்கழி 11 (டிச 27)




முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட, பிறப்பு இறப்பு அற்ற பரம்பொருளாகிய 'சிவமே' இவ்வுலகம் முழுவதும் பரந்து விரிந்துள்ளது. அத்தகைய சிவத்தை உணரும் ஆற்றல் பெற்றவர்களை தேவர்கள், நாயன்மார்கள், யோகிகள் மற்றும் சித்தர்கள் என்று நாம் சிந்திக்கலாம். அவர்கள் சிற்றின்ப இச்சைகளை நீக்கி பேரின்ப அனுபவங்களோடு வாழும் பெரியவர்கள். அவர்கள் வழியில் சிவத்தை எம்முள்ளே தேடும் முயற்சியே விரதங்களாகும். இவ்வாறு பல விரதங்கள் இருந்தாலும், மார்கழித் திங்களில் நாம் தவமியற்ற புண்ணிய காலமாக கொள்ளும் திருவெம்பாவை விரதமும், ஆதிரை நன்னாள் விழாவும் மகத்துவம் மிக்கன. (02ஆம் பக்கம் பார்க்க)

# கொக்குவில் அருள்மிகு அண்ணாமலையார் திருக்குட நன்னீராட்டு

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் சிவ வழிபாட்டு தலங்களை நிறுவும் திட்டத்தில், கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக அமையப் பெற்ற அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா கடந்த கார்த்திகைத் திங்கள் 6ம் நாள் (22-11-2023) மிகச் சிறப்பாக இறையருளோடு இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்விற்கு தமிழ்நாட்டிலிருந்து, தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் அழைப்பில் மெய் கண்ட சந்தானம் பேரூர் ஆதீனம் மற்றும் தென்சேரி மலை ஆதீன முதல்வர்கள் மற்றும் திருமுறைத் தமிழ்மந்திர வழியில் இத்திருக்குட நன்னீராட்டை நடாத்துவதற்க்காக அருட்குருநாதர். ஒளியகம் ந.ஒளியரசு ஐயா ஆகியோர் வருகை தந்திருந்தனர். மேலும் இத்திருக்கோயிற்கான அருட்கொடையாளர் சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் குடும்பத்தினர் மற்றும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட நிறுவுனர் சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன் ஆகியோர் ஒசுத்திரேலியாவிலிருந்து வருகை தந்து பங்கு பற்றியிருந்தனர். மேலும் தவத்திரு வேலன் சுவாமிகள், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், அயல் பாடசாலை அதிபர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், அதிபர்கள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் இப்பெரும் கைங்கரியத்தில் பங்கு கொண்டு அண்ணாமலையாரின் திருவருளை பெற்றிருந்தனர்.

**திருச்சிற்றம்பலம்**



# தென்னாட்டில் திருமூலர் குருபூசையுடன் ஐப்பசி நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும்



தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமானது தனது செயல்திறனை வெளிப்படுத்தும் முகமாக திங்கள்தோறும் நிறைமதியன்று தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடுகளை நடத்துவதோடு தனித்துவமாக தென்னாடு திங்கள் இதழையும் தவறாமல் வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் கடந்த ஐப்பசித் திங்கள் 11ம் நாள் நிறைமதியன்று தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தில் 38வது தென்னாடு திங்கள் இதழ் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர், சென்னை லொயலாக் கல்லூரியின் ஓய்வுநிலை பேராசிரியர் அருணை பாலறாவாயன் ஐயா அவர்கள், சைவநெறிக் கழகத் தலைவரும் தென்னாடு ஆசிரியருமான மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர் மற்றும் சைவநெறிக்கழக செயலாளர் சிவத்திரு. வினோதரூபன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

ஐப்பசி நிறைமதியன்று அன்னத் திருமுழுக்கு சிறப்பு பெறுவதால், ஐம்பூதநாதரும் அன்னத் திருமுழுக்கு திருக்கோலத்தில் சிறப்பாக காட்சியளித்திருந்தார்.

**திருச்சிற்றம்பலம்**

# சூரியனார் கோயில் ஆதீனம் தவத்திரு. சிவாக்கர தேசிக சுவாமிகள் மீண்டும் இலங்கை வருகை

கடந்த பங்குனித் திங்களில் தென்னாட்டின் அழைப்பின் பெயரில் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த சூரியனார் கோயில் ஆதீனம் தவத்திரு. சிவாக்கர தேசிக சுவாமிகள் மலையகம் நோக்கிய பயணத்தையும் மேற்கொண்டிருந்தார். அந்த வகையில் கிழக்கிலங்கை தமிழ் மக்களை சந்திக்கும் நோக்கில் சிவாக்கர சுவாமிகள் 12-12-2023 அன்று மீண்டும் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இம்முறை சுவாமிகளது வருகையின் போது அம்பாறையில் திருவாசக மாநாடும், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆன்மீக சொற்பொழிவுகளும் முன்னெடுக்கப்பட உள்ளன. அத்துடன் கிழக்கிலங்கை மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான அருட்பணிகளும் செய்ய உள்ளனர். இவ் அருட்பணிக்கு விருப்பம் உள்ள அன்பர்கள் தொடர்பு கொள்ளலாம். (தொடர்பு எண்: +91 9585984321)

**திருச்சிற்றம்பலம்**



**திருவெம்பாவையும் நிறைவும் ஆதிரை...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சிவனுக்குரிய விரதங்களில் திருவாதிரை சிறப்பு மிக்கதாகும். தேவர்க்கும் தேவனாகிய இறைவனின் ஆதிரை நன்னாள் காண, எல்லாத் தேவர்களும் அவன் புகழ் பாடி கூத்தும் ஆடி, விரைந்து வந்தனர் என சேந்தனார் பெருமான் கூறிப் போகின்றார். திருவாதவூரடிகள் 'திருவெம்பாவை' என்றும், அப்பர் பெருமான் ஆரூர் திருப்பதிகங்களான பத்துப் பாடல்கள் மூலம் ஆதிரை நாளின் சிறப்பை போற்றிச் சொல்கின்றார். மேலும் தில்லைக்கூத்தனின் ஞானக்குழந்தை ஆகிய திருஞானசம்பந்தர்,

**"ஊர்திரை வேலையுலாவும் உயர்மயிலைக்**
**கூர்தரு வேல் வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்**
**கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாய்"**

என்று திருப்பதிகம் அருளி, சாம்பலில் இருந்து பூம்பாவைக்கு உயிர்கொடுத்த வரலாற்றை உயர்வோடு போற்றுகையில் அங்கும் ஆதிரை நாளுக்கான சான்றும், அதன் மகத்துவமும் எடுத்து இயம்பப்படுகின்றது.

வரலாற்றுச் சான்றுகளதும், இலக்கிய ஆதாரங்களதும் அடிப்படையில், சைவத்தமிழர்களின் ஆதி விரதமாக இருக்கின்ற ஆதிரை விரதம், குறிப்பாக பெண்கள் போற்றி வழிபட்டதையும், பத்து நாட்கள் அவர்கள் விரதமிருந்து அதிகாலையில் துயில் நீங்கி, பனி, குளிரினை பொருட்படுத்தாது, தம் தோழியரை உடன் அழைத்துக்கொண்டு நீராடச் சென்று, பின் இறைவனின் புகழைப்பாடி உய்வு கொண்டனர்.

சிவனுக்குரிய நாண்மீனான திருவாதிரை, ஆதி முதல் நாண்மீன் என்று வானியல் ஆய்வாளர் சொல்லுவார்கள், அந்த நாண்மீன் மார்கழி நாளில் கூடும் போது ஆதிரை நாள் நீராட்டு, அண்டத்தின் இயக்கத்துக்கு அடிநாதமாக விளங்கும் நடராசருக்கு இடம்பெறுதல் தனிச்சிறப்பேயாகும். இம்முறைத் திருவெம்பாவையானது மார்கழித் திங்கள் 2ம் நாள் (டிசம்பர் 18) தொடங்கி, இறுதி நாளாகிய மார்கழித் திங்கள்11ம் நாள் (டிச 27) திருவாதிரை நன்னாளன்று ஆதிரை அருட்காட்சியும் இடம் பெறும்.

எனவே உயிர்கள் எல்லாவற்றிற்கும் மூலமும் முதலுமான, சிவனை நினைந்து கைக்கொள்ளும் ஆதிரைநாள் விரதம் இருந்து தீவினைகளைக் களைவோமாக.

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாடு

**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்**
**தலைமை ஆசிரியர் – தென்னாடு,**
+6149949 3300, thennavan@thennadu.org



# தென்னாடு எனும் செந்தமிழ் மயங்கா மரபு

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு** - (குறள் - 423)

கடல்கொண்ட தென்னாட்டின் நினைவாக, மயங்காத் தமிழர் மரபினை முதலாகக் கொண்டு, அதன் வழி நின்று தமிழர் வாழ்வியல், பண்பாடு, அறிவியல், ஆன்மீகம் போன்ற துறைகளின் உற்றுநோக்கி தொலைந்தவற்றை மீட்டு, மீண்டும் கட்டியெழுப்ப எடுக்கும் ஒரு முயற்சியாகும். முப்பொருள் உண்மையைத் தத்துவமாகக் கொண்டே தென்னாடு செயற்பாடுகள் அமையும்.

தமிழர் மெய்யியல் என்பது, தமிழ் எழுத்துகள் உருவாகி, வகைபிரிக்கும் போதே இருந்திருக்கிறது. தமிழ் எழுத்துக்களில் உயிர், மெய் மற்றும் உயிர்மெய்த் தத்துவங்கள் பிரதிபலிப்பதை காணலாம். அத்துடன் கடவுள் கொள்கையும், பழந்தமிழ் இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் “பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்” மற்றும் திருக்குறளில் “ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத் தெய்வத்தோ டொப்பக் கொளல்”. இப்படி சங்க இலக்கியத்திலும் சரி, திருமந்திரத்தில் மற்றும் பத்தி இலக்கியத்திலும் சரி தமிழர் தத்துவச் சிந்தனைகள் தொடர்ந்து, ஒரு மயங்கா மரபாக வளர்ந்து, விரிந்து கொண்டே வந்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாகத் தான் நாங்கள் மெய்கண்டாரின் தோற்றத்தினை பார்க்கவேண்டும்.

**“சதுமறை ஆரியம் வருமுன்**
**சகம்முழுதும் நினதாயின்,**
**முதுமொழி நீ அநாதி என**
**மொழிவதும்ஓர் வியப்பாமோ”** – மனோன்மணீயம்

பிறமொழிகள் தோன்றமுன்னே தமிழ்மொழி தோன்றியது என்று பெருமைபேசுவோர், தமிழர் வழிபாடும் தொன்றுதொட்டு வந்தது என்ற உண்மையை உணரவேண்டும். இப்படி தொன்றுதொட்டு வந்த வழிபாட்டு முறைகளை விட்டு, புரியாத புதிராய் இறைவனை வழிபடும் தேவைதான் என்ன. ஏக இறைவனுக்கு மொழியில்லை என்று முன்னர் பார்த்திருந்தோம். அப்படியான இறைவனை எங்கள் தாய்மொழியாம் தமிழ்மொழியில் வழிபட எங்களுக்குத் தடையேது என்ற அடிப்படையில் தென்னாட்டில் செந்தமிழ் மந்திரங்கள் ஒலிக்கவே பூசைகள் நடைபெறுகின்றன.

ஆனால் அதற்காக பிறமொழிகளைத் தாழ்த்துவதோ, குறைத்துப் பேசுவதோ எள்ளளவும் எங்கள் நோக்கம் கிடையாது. அதேபோல் எங்கள் வழிபாட்டினையும் மற்றவர்கள் குறைத்துப்பேசுவதை நாங்கள் வரவேற்பது இல்லை.இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் இயங்கும் தென்னாடு மடமும், திங்கள் இதழும் முற்றுமுழுதாக தென்னாடு தத்துவத்தின் வழி சரிவர இயங்க தினமும் முயற்சித்து வருகின்றோம். ஆனாலும் சில நடவடிக்கைகள் மற்றும் ஆக்கங்களை இன்னும் நிறைவான முறையில் இல்லாவிட்டாலும் நாளுக்கு நாள், முதிர்ச்சி அடைந்தே வருகிறோம். அதில் உள்ள இடைவெளிகளை நிரப்ப உங்கள் உதவிகள் எங்களுக்கு என்றும் தேவை. அதன் அடிப்படையில் நாங்கள் நிறைவான முப்பொருள் தத்துவநிலையில், தென்னாட்டு செந்தமிழ் மயங்கா மரபின் வழி நிறைவாக இயங்க முடியும்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சைவ சித்தாந்த துறையும் தென்னாடு செந்தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும்

# ‘மார்கழிப் பெருவிழா - 2023’

*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சைவ சித்தாந்தத் துறையும், தென்னாடு செந்தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை மார்கழித் திங்கள் 09 ஆம் நாள் (டிசம்பர் 25) திங்கள்கிழமை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடாத்த திருவருள் கூட்டியுள்ளது.*

**மார்கழித் திங்கள் 09 ஆம் நாள் (டிசம்பர் 25) திங்கள்கிழமை**

*காலை 8 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேசுவரர் திருக்கோயில் வழிபாட்டுடனும் தேவாரத் திருமுறை, நால்வர் எழுந் தருளலுடுடன் அமர்வுகள் ஆரம்பமாகும்.*

### காலை அமர்வு - தில்லைக்கூத்தன் திருவம்பலம்
**(காலை 9.00 மணி தொடக்கம் 12.30 மணி வரை)**

- *9: 15 திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள் வழிபாடும்*
- *9:30 குருமரபு வாழ்த்து*
- *9:35 பஞ்சபுராணம் ஓதுதல்*
- *9:45 வரவேற்பு நடனம்*
- *9:55 அருளுரை*
- *10:05 தொடக்க உரை (கலாநிதி தி. செல்வ மனோகரன் - மூத்த விரிவுரையாளர், சைவசித்தாந்தத்துறை)*
- *10:15 திருமுறை விண்ணப்பம்*
- *10:35 தலைமை உரை (கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் - தலைவர், சைவ சித்தாந்தத்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)*
- *10:45 துணை வேந்தர் உரை (பேராசிரியர் சி.சிறி சற்குணராசா - துணைவேந்தர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)*
- *11:00 சிறப்புரை (‘சிவத்திரு ச.விநாயகமூர்த்தி ஐயா - ஓய்வு நிலை போதனா ஆசிரியர்)*
  *தலைப்பு - “திருவாசகத் தேனமுதம்”*
- *12:00 அடியார்க்கு திருவமுது செய்வித்தல்*

**அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 முதல் 1.30 மணி வரை**

### மாலை அமர்வு - சேக்கிழார் அரங்கம்
**(1.30 மணி முதல் 5.30 மணி வரை)**

- *1:30 தொடக்க உரை (கலாநிதி இ. ஜெயேந்திரன் - மூத்த விரிவுரை யாளர், சைவ சித்தாந்த துறை)*
- *1:45 தலைமை உரை (சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன் - நிறுவுனர், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)*
- *2:00 சிறப்புரை (சிவ.பவானி அ. தியாகராசன் ஐயா)*
  *தலைப்பு - ‘பெரியபுராணம்’*
- *3:30 காணொளி காட்சி*
- *3: 45 பட்டிமண்டபம்*
- *4: 45 பரிசளிப்பு நிகழ்வு*
- *5: 15 நன்றி உரை (சிவத்திரு. வனராஜ் சசிராஜ் - தலைவர், சைவ மாணவர் சபை)*

**நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு.செந்தமிழாதன் மற்றும் சிவத்திரு. பாலுசாமி சிவமாதவன் (ஆசிரியர்கள் - தென்னாடு திங்கள் இதழ்)**

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

**திருச்சிற்றம்பலம்**

# கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக அமையப் பெற்ற அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு (22-11-2023)





# தென்னாடு

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



## ஆதிரை நாள் காணாதே போதியோ!

மார்கழி என்றாலே மாதொருபாகனாருக்குரியது தான். அதிலும் திருவாதிரை மிகுந்த சிறப்பு பெறுகின்றது. இவ்வாறு ஆதிரை ஒளியில் அரனை வழிபடும் வழக்கம் இன்று நேற்றுத் தோன்றியதல்ல. பல நூற்றாண்டுகளாய்த் தொடர்ந்துவரும் வழக்கமே அது! ஆம் நம் பண்டைத் தமிழரும் ஆதிரைநாளைக் கொண்டாடி மகிழ்ந்திருக்கின்றனர்.

அதற்கான சான்றில் ஒன்றாக எமது தலைப்பையே கொள்ளலாம். **"கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான் ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்"** என்று ஞானசம்பந்தப் பெருமான் கேக்கிறார். அதாவது அரவு தீண்டி இறந்து எரித்த சாம்பலை பார்த்து, "அரும்பெரும் சிறப்புடைய ஆதிரை நன்னாளை காணாமல் போகிறாயா, எழுந்து வா" என்கிறார். உடனே பூம்பாவையும் எழுந்து வருகிறது. அதில் தான் நாம் வியக்க வேண்டும். பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பார்கள். இவை வெறும் பேச்சுமொழிகள் மட்டுமே, ஆனால் அன்று எறிந்த சாம்பலில் இருந்து முழு உருவமே எழுந்து நின்றது. அதுவே சிவபெருமானின் சிறப்பு. சிவபெருமானுக்குரிய திருவாதிரையின் சிறப்பு.

அப்பர் தேவாரத்தில் **'திருவாதிரைத் திருப்பதிகம்'** என்று ஒரு பதிகமே இடம்பெற்றிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. திருவாதிரையின் சிறப்பினைக் கூறும் இப்பதிகத்தின் ஒவ்வோரு பாடலின் இறுதி வரியும் 'ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்'என முடிகின்றது.

**"பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்**
**பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"** எனும் அப்பரின் மற்றொரு தேவாரப் பாடல் இங்கு ஒப்புநோக்கி இன்புறத்தக்கது.

பிறவியைப் பிணியென்றும், மண்ணுலகில் மீண்டும் மீண்டும் பிறந்துழல்வதையே பாவமென்றும் எண்ணும் அரனடியார்கள்கூட "ஆடல்வல்லானின் குனித்த புருவத்தையும், சொவ்வைக்கனிபோல் சிவந்த வாயினையும், அதில் தவழும் குமிண் நகையையும் (புன்முறுவல்), குளிர்ந்த அவன் சடையழகையும், பவளம்போல் ஒளிறுவிடும் சிவந்தமேனியில் துலங்கும் பால்வெண்ணீற்றையும், தூக்கிய திருவடியுடன் அவன் ஆடுகின்ற அற்புதக்காட்சியையும் காணும்பேறு கிட்டுமானால் இம்மனிதப் பிறவியும் விரும்பத்தக்கதே" என்கின்றனர்.

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ் வாயில் குமிண்சிரிப்பும்**
**பனித்தசடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்**
**இனித்தம்உடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மா நிலத்தே!**

**"ஆலவாயுடையார் புகழ் பாடப்பெறுவேமேல் வேண்டுவதிம் மனித யாக்கை"** என்கிறார் திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவரும்!

எனவே சிறப்புமிகு இத்திருவாதிரைத் திருநாளில், கண்ணுக்கினியானாய்க் காட்சி நல்கும் கண்ணுதற்கடவுளின் கழலிணைகளைப் போற்றுவோம்! நாமெடுத்த இம்மனிதப் பிறவியைப் புனிதப் பிறவியாய் மாற்றுவோம்!

திருச்சிற்றம்பலம்

**கடந்த இதழில் "மூலன் செய்த மூவாயிரம் தமிழ்" என்ற ஆசிரியர் தலைப்பில் "6,7 ஆம் நூற்றாண்டுகளுக்கான திருமுறை ஆசிரியர்கள் " என்ற வகைப்படுத்தலில் திருமூலர் தவறுதலாக சேர்க்கப்பட்டுவிட்டார் என்பதை தெரியப்படுத்துகின்றேன்.**

## தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

**மந்திரங்களில் தலையாய மந்திரம் எது?**

**அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்**
**அஞ்செழுத்தே ஆதிபுரா ணம்அனைத்தும் - அஞ்செழுத்தே**
**ஆனந்தத் தாண்டவமும் ஆறாறுக் கப்பாலாம்**
**மோனந்த மாமுத்தியும் - உண்மை விளக்கம்**

"எம்பெருமான் அருளிய வேதாகமங்களும் திருவைந்தெழுத்தேயாகும். முதன்மைபெற்ற புராணங்களனைத்தும் திருவைந்தெழுத்தேயாகும். ஆனந்த நடனமும் தத்துவாதீதமாகிய மௌனமாயிருக்கும் பரமுத்தியும் திருவைந்தெழுத்தேயாகும்." என்று மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றாகிய உண்மை விளக்கம் நூல் உரைக்கின்றது.

**அருள் நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்**
**பொருள் நூல் தெரியப்புகின்** - திருவருட்பயன் (மெய்கண்டசாத்திர நூல்)

ஆகமங்கள், மறைநூல்கள், மற்றைய சமய சாத்திர நூல்கள் என்று சொல்லப்படும் எல்லா நூல்களின் பொருளும் திருவைந்தெழுத்தில் அடங்கும் என்பது உமாபதி சிவாசாரியப்பெருமான் அருளிய திருவருட்பயன் என்னும் மெய்கண்டசாத்திரத்தின் முடிவு. எனவே, மந்திரங்களில் தலையாயது திருவைந்தெழுத்து என்பதைத் தெளியலாம்.

**துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்**
**நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்**
**வஞ்சகம் அற்றுஅடி வாழ்த்த, வந்த கூற்று**
**அஞ்சஉ தைத்தன அஞ்சு எழுத்துமே** - திருஞானசம்பந்தர்பெருமான் தேவாரம்

"தூங்கும்பொழுதும், விழித்திருக்கும் பொழுதும், மனம் கசிந்து உருக நாள்தோறும் திரு ஐந்தெழுத்தை நினைத்துப் போற்றுங்கள். பல வழிகளில் திரிந்து செல்லும் தன்மையுடைய மனத்தை அவ்வாறு செல்லவிடாமல் தடுத்து ஒருமுகப்படுத்தி இறைவனையே நினைத்து அவன் திருவடிகளை வாழ்த்திப் போற்றிய மார்க்கண்டேயரின் உயிரை அவருக்கு விதிக்கப்பட்ட வாழ்நாள் இறுதியில் கவர வந்த கூற்றுவனை உதைத்து அழித்தன திருவைந்தெழுத்தே" என்கின்றார் திருஞானசம்பந்தப்பெருமான்.

**"மரணம்கை வைத்துஉயிர் மாற்றிடும்போதும்**
**அரணம்கை கூட்டுவது அஞ்சுஎழுத்து ஆமே"** - திருமந்திரம்

மரணத்தின்போது உடலைவிட்டுப் பிரிந்துசெல்லும் நம் உயிருக்குப் பாதுகாப்பாக உடன்வந்து நிற்பது திருவைந்தெழுத்தேயாகும் என்று திருமூலர்பெருமான் அருளுகின்றார்.

**"எழுத்தை அழுத்தும் எழுத்து"** என்று திருமூலர்பெருமான் திருவைந்தெழுத்து பிரம்மன் எழுதிய தலையெழுத்தென்னும் ஊழ்வினையை அடக்கிவிடும் என்கின்றார். திருவைந்தெழுத்தினை ஓதுவோருக்கு ஊழ்வினை ஊறுசெய்யாதென்பதை' **"அஞ்செழுத்து அருளினாலே வந்தவாறு உரை செய்வாரை வாதியா பேதியாவே"** என்று மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றாகிய சிவப்பிரகாசம் நூலும் உரைத்தருள்கின்றது,

திருஞானசம்பந்தப்பெருமான் முதலிய நாயன்மார்கள், சந்தானகுரவர்களைக் காட்டிலும் நமக்கு வேறேதும் வழிகாட்டுதல் தேவைதானோ? திருவைந்தெழுத்து ஒன்றே எக்காலமும் நாம் ஓதிக்கொண்டிருக்கவேண்டிய மந்திரம் என்பதும், அம்மந்திரமே உயிர்கள் உடலைவிட்டுப் பிரிந்தசமயத்தில் உடன் நின்று உதவுவது என்பதும் இதனால் நன்கே பெறப்படும். சிவாசாரியர் முதல் பொதுச்சைவர்வரை இவ்வுண்மைகளை நன்குணர்ந்து திருவைந்தெழுத்தினைத் தம்கவசமாய்க் கொண்டு வாழ்தலே சைவப்பிறவியின் கடனாகும்.




சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# அகப்பகையை வெல்வோம்!

உலகம் மாயையை முதற்காரணமாகக் கொண்டது. பல்வேறுபட்ட இயல்புகளையுடைய ஆன்மாக்களின் இருப்புக்கு இவ்வுலகமே தளமாக அமைகின்றது. இவ்வுலகில் இருக்கின்ற எண்ணிலடங்கா ஆன்மாக்கள் செயல்களை ஆற்றுவதற்குரிய முனைப்பை ஆணவமாகிய தன்முனைப்பே தருகின்றது. இவ் ஆணவமே ஆன்மாக்களின் அறிவையும் மறைத்து நிற்கின்றது. “நான் பெரியவன்” என்ற எண்ணமும், “எல்லாம் என்னால் முடியும்” என்ற கர்வமும் அமைதியற்ற வாழ்வையே பரிசாக எமக்கு தருகின்றது. இங்கனம் எம்மை உழல்விக்கும் ஆணவமலத்தின் அடர்த்தி குறையாது போனால் இறைவன் என்கின்ற அறிவுப் பொருளின் காட்சி எமக்கு துலக்கமாயிருக்காது. எனவே நாம் இவ் மனிதப் பிறவி அடைந்ததன் நோக்கமாகிய முத்தியின்பம் பெறும் வழிகளை கண்டு பயணிப்பதற்கு தடையாக உள்ள ஆசைகளையும், ஆணவத்தையும் அறவே துறக்க முயல வேண்டும்.

தன்னால் அடைய முடியாத உயர்ந்த இடத்தில் உள்ள ஒருவரின் மீது காழ்ப் புணர்வு கொள்வதும், அவரின் செயல்கள் பற்றியதான வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பதும் உத்தமமான விடயமாகும். பசு அறிவாகிய சீவன் அறியும் அறிவை சிவனை அறியும் அறிவாக உயர்த்திக் கொள்வதற்கு சிவ வழிபாடும், ஞான நூல்களின் தேட்டமும் மிக அவசியமாகும். மாணவப்பருவத்தில் இருந்து இதனைப் பயிற்சியாக முயற்சி செய்வது சாலச்சிறந்தது. தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் பாடசாலைகள் தோறும் சிவாலயங்களை அமைப்பதன் நோக்கமும் இதுவேயாகும். நாத்தீகர்களும் ஆத்திகர்களும் பொதுவாக ஏற்கும் உயிர்மை நேயத்தை சிவவழிபாடு எமக்கு கற்றுத்தரும்.

சைவத் தமிழர்களாகிய நாம் எல்லோரும் எமக்கிடையே பல்வேறுபட்ட காரணிகளாலும் சுயவிருப்பு வெறுப்புக்களாலும் தன்முனைப்பாலும் பல கூறாகி அகப்பகை வளர்த்து வருகின்றோம். இது ஆரோக்கியமானதொன்றல்ல. எமது அடுத்த தலைமுறை பற்றியும் சிந்தித்து மெய்யை அறிய அவர்களை வழிப் படுத்த வேண்டிய பெரியவர்களே போட்டியிட்டுக்கொள்வது காலத்துக்கு ஒவ்வாத விடயமாகும். இன்று இளையவர்கள் பலரும் சுய பக்குவம் அடையாமல் சமூக வலைத்தளங்களிலும், பொதுவிலும் தம்மிலும் அனுபவ அறிவு முதிர்ச்சி அடைந்தவர்களையே விமர்சிப்பது சாதாரணமாகிப் போனதற்கு இதுவே காரணம் இதுவேயெனலாம். சமூகப் பொறுப்பு வாய்ந்த தலைமைத்துவ பீடங்களில் இருக்கும் பெரியவர்கள் கடந்த கால கசப்பான விடயங்களை மறந்து, எம் சமயம் சார்ந்தும் ஆகமங்கள் சார்ந்தும் இளைய பிள்ளைகள் மனங்களில் நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தாது செயற்படுவதே காலத்தின் தேவையாகும். அறநெறிபிறழாத அன்புநெறியில் தவறாத தலைமுறையின் உருவாக்கத்தின் ஊடாகவே சமூக பிறழ்வுகளற்ற எதிர்கால உலகை எம்மால் படைக்க முடியும் என்பதை நாம் உணர்ந்து அதற்கு உதவும் ஆன்மீக கட்டமைப்பை இன்னும் பலப்படுத்த வேண்டியது நம் எல்லோருடைய கடமைப் பொறுப்பாகும்.

பிரிந்து நின்றும் எம்மால் பல சாதனைகளை இன்று செய்ய முடிகின்றது என்றால், நாம் சேர்ந்து நின்றால் இன்னும் எத்தனை பெரிய சாதனைகளை படைக்கமுடியும் என்ற சிந்தனை ஏன் இன்னும் எம்மிடம் தோன்றவில்லை? எம் சமய குரவர்களான ஞானசம்பந்தர் முதலியோரும் அகப்பகையை புரிந்துணர்வாலும் ஏற்றுக்கொள்ளல்களாலும் வென்றனர். அகச்சமயத்தவரையும் அணைத்துக்கொண்டே புறப்பகையை வென்றனர்.

இன்றும் எம்மத்தியில் வேரூன்றியிருக்கின்ற புறச்சமயத்தவர்களை வென்று, அவர்களின் ஆசை வார்த்தைகளுக்கும் சலுகைகளுக்கும் ஆசைகொண்டு தடம்மாறும் எம்மவர்களை தாய்சமயம் மீட்க வேண்டிய பெரும் பொறுப்பு பற்றி நாம் சிந்தித்தோமா?

சைவப் பணிகள் பெருமளவில் இன்று இடம்பெற்றாலும், கிராமங்கள் தோறும் மதமாற்றம் என்னும் தொற்று நோய் பரவிக்கொண்டே இருக்கின்றது. எனவே இன்று பிரிந்து நிற்கும் சைவத்தமிழர்கள் எல்லோரும் சிவப்பரம்பொருளின் பெயரினாலே ஒன்றிணைய முன்வரவேண்டும். ஒற்றுமைப்பட்ட ஒரு சத்தி வாய்ந்த அமைப்பின் முன்னால், மதமாற்ற கும்பல்கள் தம்மை நிலைப்படுத்த முடியாது.

உயர்ந்த தத்துவமான சைவசித்தாந்தத்தை எம் அடுத்த தலைமுறை உணர்வதற்குத் தடையாக இருக்கும் புறச்சத்திகளை வலிமைகுன்றச்செய்து, ஆன்ம பலத்தையும் மெய்யறிவையும் இளைய தலைமுறை பெறுவதற்கு பெரியவர்கள் இணைந்து நிற்பதும், அகப்பகை நீங்கி ஓரணியில் கரம் கோற்பதும் எம் எதிர்பார்ப்புக்களாகும்.

திருச்சிற்றம்பலம்




சிவத்திரு.யாழுவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# சைவமா அசைவமா?

உணவை பொறுத்த வரையில் உலகம் இருகூறாக தன்னை அடையாளப்படுத்தியுள்ளது. தாவர உணவு உண்பவர்கள் தம்மை சைவ உணவு உண்பவர்கள் என்றும், தாவர, மாமிச உணவு உண்பவர்கள் அசைவ உணவு உண்பவர்கள் என்றும் அடையாளப்படுத்துகின்றார்கள். புதிதாக, தாவரங்களில் இருந்து பெறப்பட்ட உணவை மாத்திரம் உண்பவர்கள் என்ற ஒரு வகையினர் (vegan) உருவாகி வருகின்றனர். இந்த நிலையில் “ உண்ணும் உணவு தொடர்பாக சைவ சமயத்தின் நிலைப்பாடு என்ன?” என்ற கேள்வி வலுப்பெற்று வருகின்றது.

**“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும் “**

என்ற வார்த்தைகளை தமிழ் மறை கூறி நிற்கின்றது. திருமூலர் கூட புலால் உண்ணாமையின் சிறப்பை திருமந்திரத்தில் வலியுறுத்தி இருக்கின்றார். ஆகவே சைவம் புலாலுண்ணாமையையே கடைப்பிடிக்கச் சொல்கிறது என்பது ஒருசாரார் கருத்து இதுவே பெரும்பான்மைச் சைவசமயத்தவரின் கருத்தும் கூட

**“ உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்**
**குருதிச் செந்தினைப் பரப்பி குறமகள்**
**முருகுஇயம் நிறுத்து முரணினர் உட்க”**

என்பது திருமுருகாற்றுப்படையின் வரிகள் முருகனுக்காக குருதி தோய்த்த அரிசி தூவப்படுவதை நக்கீரர் காட்சிப்படுத்தியுள்ளார். கண்ணப்ப நாயனார் பன்றி இறைச்சியைச் சுட்டபோது, கொழுப்பு வாசனை உருக அது சமையலானதை சேக்கிழார் காட்சிப் படுத்தியுள்ளார்.

**“ கோலினால் கோத்துக் காய்ச்சிக்**
**கொழுந்தசை பதத்தில் வேவ**
**வாலிய சுவைமுன் காண்பான்**
**வாயினால் அதுக்கிப் பார்த்து”**

என்பன சேக்கிழார் பெருமானின் வரிகள், சங்ககால இலக்கியங்கள் முழுவதிலும் தமிழர் மாமிசம் புசித்தமைக்கு ஏராளமான ஆதாரங்கள் உண்டு. ஆகவே சைவர்கள் புலாலுண்ண முடியும் என்பது இன்னொரு சாரார் கருத்து. இது மறுக்க முடியாததும் கூட அப்படியென்றால் சைவசமயிகள் எதைக் கடைப்பிடிக்க வேண்டும்? என்ற கேள்விக்கு விடை காண முன்னர் ஒரு அடிப்படை விடயத்தை விளங்கிக் கொள்வது அவசியம். சைவம் அன்பை வலியுறுத்தும் அன்புவழிச்சமயம். இறைவன் அனைவர் மீதும் அன்பாக இருக்கிறான் என்பது சைவசித்தாந்த முடிபு. இறைவன் எம்மீது அன்பு செலுத்துவதைப் போல, நாமும் பிற உயிர்கள் மீது அன்பைச் செலுத்த வேண்டுமன்பது சைவசமயக் கோரிக்கை. அன்பை அடிப்படையாக வைத்துத்தான் புலாலுண்ணாமையை சைவம் வலியுறுத்துகிறதே தவிர, புலால் உண்பது பெரும் பாவம் என்றோ, புலால் உண்பவர்கள் நரகச்சட்டியில் போட்டு வாட்டப்படுவார்கள் என்றோ, புலால் உண்பவர்களிடம் இறைவன் இருக்க மாட்டான் என்றோ சைவம் கூறவில்லை.

புலால் உண்ணாமை பெருந்தவம் மற்றைய உயிர்களிடத்து அன்பு செலுத்தின் அது போற்றுதலுக்கு உரிய நிலை அதற்காக புலாலுண்பவர்களை இறைவன் ஏற்க மாட்டான் என்பது பெரும்தவறு நாங்கள் உயிர்கள் மீது அன்பு செலுத்தினாலோ, அன்பு செலுத்தாமல் விட்டாலோ அதில் இறைவனுக்கு எந்த வேறுபாடும் கிடையாது. வேண்டுதல் – வேண்டாமை இல்லாத இறைவன் சரிசமமாகவே அருள் பாலிப்பான். இரண்டு வழியை சைவம் காட்டியிருக்கிறது. எந்த வழியையும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது உங்கள் ஒவ்வொருவருடைய சொந்த முடிவே. அது எவ்வழியாக இருப்பினும் மையம் ஒன்றே மையமாவது இறைவன் பால் அன்பு.

**“எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்**
**மன்னிய சீர்ச் சங்கரன் தாள் மறவாமை பொருள் என்றே “**

திருச்சிற்றம்பலம்

# தாய்மொழியாம் தமிழ்மொழியில் அர்ச்சனை

**சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**

**(தமிழ் அர்ச்சனை கடந்த திங்கள் தொடர்ச்சி)**

**வேதச் சிறப்பு:**

மேற்கூறிப்போந்த வரலாற்றால் இந்திய நாட்டின் ஒருகால கட்டம் தனித்தமிழ்க் காலமாய் இருந்தமை புலனாதலால், அந் நிலைமை எத்தகைய சூழ்நிலையால் மாறி ஆரியம் இந்திய நாட்டுத் தெய்வ மொழியாகும் நிலைமை உண்டாயிற்று என்பதை இன்று நாம் அறிந்து கூற இயலாது.

ஆரியர்க்கும், தமிழர்க்குமிடையில் போராட்டம் இருந்தமைக்கு ஆரிய வேதத்திலேயே சான்றுகள் உள்ளன. அதனால் ஆரியம், இந்திய நாட்டின் தெய்வ மொழியாகும் நிலைமை எளிதில் பெற்றுவிட்டதாகச் சொல்ல இயலாது. ஆகவே, பல போராட்டங்களில் எவ்வகையிலோ ஆரியர் "தங்கள் வேதமே வேதம் தங்கள் மொழியே தெய்வமொழி" என நிலைநாட்டுவதில் வெற்றி பெற்றவராயினர். அது வழியாக அவர்கள் தங்களை "நிலத்தேவர்" (பூசுரர்) என்றும் சொல்லிக் கொண்டனர். ஆகவே, இன்று திருக்கோயில்களில் தமிழ் அருச்சனைக்கு இடம் அளிப்பது, தமிழுக்கு மறுவாழ்வு அளிப்பதாகுமேயல்லாது, படைப்புக் காலத்திலிருந்தே இயல்பாக அமைந்த ஒரு நிலைமைக்குச் சிதைவு செய்வதாக ஆகாது.

**தமிழின் சிறப்பு:**

ஆரியம் வராத காலத்தில் தமிழ் சிறப்புற்று விளங்கியிருக்கலாம். ஆரியம் வந்த பின் இந்திய நாட்டில் வேறு எந்த ஒரு மொழியும் ஆரியத்தோடு ஒத்த பெருமையைப் பெறவில்லை என்று ஒரு புது நியாயத்தைச் சிலர் முன்மொழியலாம். அதனை வேறு சிலர் வலியுறுத்தவும் செய்யலாம். அதனை நடுநிலையாளர்கள் ஏலார், ஏனெனில் "ஆரியத்திற்கு நிகராகா - என்னும் கூற்று ஏனைய மொழிகளுக்குப் பொருந்தலாம் தமிழிற்கு அது பொருந்தாது" எனத் தமிழ்ச் சான்றோர்கள் மறுத்துள்ளனர்.

**எடுத்துக்காட்டு:**


**"கண்ணுதற்பெரும் கடவுளும் கழகமொடு அமர்ந்து**
**பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ் என**
**மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிகள்போல்**
**எண்ணிடைப்படக்கிடந்ததா எண்ணவும் படுமோ"**
- (பரஞ்சோதி திருவிளையாடல். நாட்டுப் படலம்-57)

**"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்**
**தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்துங்**
**குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்**
**கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே கணித்தறிவார் !"**

**"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர், இயல்வாய்ப்ப**
**இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர், இசைபரப்பும்**
**இருமொழியும் ஆன்றவரே தழீஇயினார் என்றால் இவ்**
**இருமொழியும் நிகரென்னும் இதற்கையம் உளதேயோ!" -**
**(காஞ்சிப்புராணம். தழுவக் குழைந்த படலம். 248, 249)**

**"தமிழ், இலக்கண இலக்கிய வளம் உடையதாய் இருக்கலாம் ஆயினும் தெய்வமொழியாகச் சொல்ல இயலுமோ?" என யாரேனும் வினவினால் அதற்கும் பரஞ்சோதி முனிவர் தக்க விடை கூறியுள்ளார்.**

**"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை**



தருமை ஆதீனப் புலவர்
முதுபெரும் புலவர் சித்தாந்தக் கலைமணி திருமுறை உரைமணி
திருநெறித் தமிழ்ச்சுடர் மகாவித்துவான் முனைவர்
உயர்திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்.

**உண்ட பாலனை யழைத்ததும் எலும்புபெண் ணுருவாக்**
**கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்**
**தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்."**
- திருவிளையாடல் புராணம். நாட்டுப் படலம்-58)

திருமுறை கண்ட புராணமும் திரு நெறித் தமிழின் தெய்வத் தன்மையை,

**"எரியினிடை வேவாது ஆற்றெதிரே ஓடும்**
**என்புக்கும் உயிர்கொடுக்கும் இடுநஞ்சு ஆற்றும்**
**கரியை வளைவிக்கும் கல் மிதக்கப் பண்ணும்**
**கராமதலை கரையில் உறக் காற்றுங் காணே."** எனக் கூறுகின்றது.

இனிச் சிவபெருமான் தானே செய்த அகப்பொருள் இலக்கண நூல் நக்கீரரது உரையுடன் இன்றும் பயிலப்பட்டு வருகின்றது.

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன்காண்" என அப்பர் அருளிச்செய்த - சிவ பெருமான் "தருமி" என்னும் அடியவருக்காகப் பாடிக் கொடுத்த "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் அகப்பொருட் பாடல் "குறுந்தொகை" என்னும் தொகை நூலின் முதற்பாட்டாக மிளிர்கின்றது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு சீகாளத்திப் புராணம்,

**"மறைமுதற் கிளந்த வாயான்**
**மதிமுகிழ் முடித்த வேணி**
**இறைவர்தம் பெயரை நாட்டி**
**இலக்கணம் செய்யப் பெற்றே**
**அறைகடல் வரைப்பில் பாடை**
**அனைத்தும் வென்று ஆரியத்தோடு**
**உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை**
**உள்நினைந்து ஏத்தல் செய்வாம்."** எனக் கூறிற்று.

மதுரை ஆலவாய்ப் பெருமான் பாணபத்திரருக்குப் பாடிக் கொடுத்த திருமுகப் பாசுரம் பதினொன்றாந் திருமுறையின் முதற் பாடலாக இருந்து அணிசெய்கின்றது.

தில்லைக் கூத்தப் பெருமான் பெத்தான் சாம்பனுக்குத் தீக்கை முறையால் முத்தி கொடுக்கும்படி தமிழில் எழுதி விடுத்த சீட்டுக்கவி சந்தானாசாரியரது வரலாற்றின் இடையில் இடம்பெற்று விளங்குகின்றது.

சேரமான் பெருமாள் நாயனார் அருளிச் செய்த ஞான உலாவாகிய ஆதியுலா அந்நாயனாரால் திருக்கயிலையில் சிவபெருமான் திருமுன்பில் கூடியிருந்த சிவகணப் பேரவையில் அரங்கேற்றப் பெற்றது.

இன்னோரன்ன பல நிகழ்ச்சிகளால் தமிழ் மொழியின் தெய்விகத் தன்மை தெற்றென விளங்கும். ஆகவே, "திருக்கோயில்களில் தமிழ் அருச்சனையை அனுமதிக்க முடியாது" எனக் கூறுதற்குக் காரணம் எதுவும் இல்லை.

திருஞானசம்பந்தர் தமது திருவாய்த் திருப்பதிகத் திருக்கடைக் காப்பில்,

**"போயநீர் வளங்கொளும் பொருபுனற் புகலியான்**
**பாயகேள்வி ஞானசம் பந்தன்நல்ல பண்பினால்**
**ஆயசொல்லின் மாலைகொண்டு ஆலவாயில் அண்ணலைத்**
**தீயதீர எண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே"**

எனச் "சிவபெருமானைத் தமது பாடல் வழியாகத் தியானிப்பவர் உள்ளங்களில் அப்பெருமான் இனிது விளங்கி நிற்பான்" என அருளிச் செய்தார்.

**"சலம்பூவொடு தூபம் மறந் தறியேன்**
**தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்..."**

என்று அப்பர், தாமே தமிழ்ப் பாடலால் இறைவனை வழிபட்டதாகக் கூறியுள்ளார்.

சுந்தரர்,

**"நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்**
**கரையனும் பாடிய நற்றமிழ் மாலை**
**சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானை "** - திருமுறை 7-67.5

எனச் சம்பந்தர், அப்பர் பாடல்களைக் கொண்டு துதிப்பதைச் சிவபெருமான் மிகவும் விரும்புவான் என அருளிச் செய்தார்.

பேரூர் ஆதீன முதல்வர் சாந்தலிங்க அடிகள் தமது வைராக்கிய சாதகத்தில்,

**ஒழித் திடும்பவப் பகைவிரைந்து உள்ளமே**
**ஓதுமூ, துணர்வோர்முற்**
**பழிச்சு பாடலை அரற்குஅவை விடர்க்கு இளம்**
**பாவையர் உரைபோலும்!**
**கழித்தி டேல்உப சாரம்என்று இதனை நீ**
**கட்டுரை எனக் கொள்வாய்**
**விழித்து மாரனை எரித்த தே அருள்பெறும்**
**விருப்பினர் விருப்பு ஈதே -** (பாடல் - 59)

என்று நால்வர் தமிழைச் சிறப்பித்துள்ளார்கள். மூதுணர்வோர் என்பது 'நால்வர் முதலானவர்' என உரை வகுக்கப்பட்டுள்ளது.

**திருச்சிற்றம்பலம்**

**தமிழ் அர்ச்சனை தொடரும்...**

**மூலம் : இலண்டன் சைவ மாநாடு**
**சிறப்புமலர் 2004 - பக்கம் 47**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**சிவமூர்த்தங்கள் என்பன எவை?**

சுத்த மாயையிலுள்ள மகேசுவர தத்துவத்தில் நின்று சிவன் கொள்ளும் இருபத்தைந்து மூர்த்தங்கள் சிவமூர்த்தங்கள் அல்லது மகேசுவர வடிவங்கள் எனப்படும். இவை, சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாண சுந்தரர், பிட்சாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தாரி, மாதங்காரி, வீரபத்திரர், அரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்ரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர் என்பவையாம்.

இச்சிவ மூர்த்தங்களும் சிவலிங்கம், அம்பிகை, விநாயகர், முருகன், வைரவர் ஆகிய சிவவடிவங்களும் வழிபாட்டுக்கு உரியவை.

**பிற தெய்வ வடிவங்கள் வழிபாட்டுக்குரியன இல்லையா?**

சிறு தெய்வங்களும் பிற தெய்வங்களும் சைவர்களின் வழிபாட்டுக்கு உரியவை அல்ல. இவற்றை வழிபடுவதால் எந்தப் பயனும் விளையாமல் ஆன்மீக வளர்ச்சிக்குத் தடை உண்டாதலும் உண்டு. சிறு தெய்வங்கள் பொதுவாக உயர்நிலை அடைந்த ஆன்ம வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களும் சிவனருளாலே உயர்நிலை அடைந்தவர்கள் தமது புண்ணிய பலத்தினால் வானுலகத்தில் இருப்பவர்கள். இவர்களை வழிபடுவதை விடுத்து மேற்குறிப்பிட்ட சிவ மூர்த்தங்களை வழிபடுவது நிலையான பலனைத் தரும். இதனாலேயே திருமுறைகளும் சாத்திர நூல்களும் சிவ வழிபாட்டை ஊக்குவித்து, பிற தெய்வ வழிபாட்டைக் கண்டிக்கின்றன.

**இறைவன் கொள்ளும் திருமேனிகள் அவன் செய்யும் ஐந்தொழிலுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன?**

சுத்தவித்தையில் இறைவன் அயனாக (பிரமனாக) நின்று படைத்தல் தொழிலைச் செய்கிறான். மாலாக (விட்டுணுவாக) நின்று காத்தல் தொழிலைச் செய்கிறான். உருத்திரனாக நின்று அழித்தல் தொழிலைச் செய்கிறான். மகேசுர தத்துவத்தில் மகேசுவரனாக நின்று மறைத்தல் தொழிலைச் செய்கிறான். சாதாக்கிய தத்துவத்தில் சதாசிவனாக நின்று அருளல் தொழிலைச் செய்கிறான். இவற்றை நோக்கின் சிவபெருமான் ஒருவரே ஐந்தொழில்களும் செய்பவர் என்பது பெறப்படும்.

மேலே குறிப்பிட்ட உருத்திரனை 'மகா ருத்திரன்' என்றும் குறிப்பிடுவர். இவர் சுத்த மாயையில் நின்று அழித்தல் தொழில் செய்பவர். சுத்தமாயைக்குக் கீழும் உருத்திரர்கள் உள்ளனர். இவர்கள் 'குணிருத்திரர்' எனப்படுவர். இவர்கள் உயிர்வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இறைநிலை அடைந்தவர்கள். சிவபெருமான் அதிட்டிக்க (அருள் ஆணையிட) செயலாற்றுபவர்கள் இவர்கள். இவர்களின் திருமேனி அணுபட்சத் திருமேனி எனப்படும். மகாருத்திரரின் திருமேனி சம்புபட்சத் திருமேனி எனப்படும். (அணு - ஆன்மா் சம்பு - சிவன்). சுத்தமாயைக்குக் கீழ் உருத்திரர் போன்று பிரமாக்களும் விஷ்ணுக் களும் உள்ளனர். இவர்களும் அணுபட்சத் திருமேனி கொண்டவர்கள். சிவபெருமானின் அடிமுடி தேடிச் சென்றவர்கள் இவர்களே.

**சிவனின் அடிமுடி தேடிய வரலாறு எதனை உணர்த்துகிறது?**

அடிமுடி தேடிய மாலும் அயனும், மேலே கூறியபடி, ஆன்மவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தம்புண்ணிய பலத்தால் வானுலகில் இருந்தாலும், தாம் உயர்நிலையில் இருப்பவர் என்ற கர்வம் இவர்களுக்கும் உண்டு. இந்தக் கர்வம் ஆணவத் தொடர்பாலான மலவாசனை யால் வந்தது. இது இருக்கும் வரை இறைவனை முற்றாக அறிய முடியாது என்பதை உணர்த்துவது இந்தக் கதை.

**திருக்கோயில்களில் காணும் மூர்த்தங்கள் பல இறைவன் இறைவி (ஆண், பெண்) வடிவங்களாக உள்ளன. இவற்றுக்கிடையில் கணவன் மனைவி உறவு, தந்தை மகன் உறவு போன்றவையும் கூறப்படுகின்றன. இவை குறித்த விளக்கம் என்ன?**

இறைவனின் அருட்சத்தியே இறைவியாகக் கொள்ளப்படுகிறது. இறை சத்தியும் ஞான சத்தி, கிரியா சத்தி, இச்சா சத்தி என மூன்றாகக் கூறப்படுகிறது. இறைவன் அல்லது இறைவி தனியாக நிற்கும் வடிவங்கள் இம்மூன்றும் சேர்ந்த இறைவனை அல்லது சத்தியை உணர்த்து கின்றன. **உதாரணம்:** விநாயகர் வடிவம், சிவன் மட்டும் தனியாக இருக்கும் வடிவம். சில வடிவங்கள் இறைவனும் இறைவியும் சேர்ந்தி ருப்பவை. இவை இறைவனையும் இறை சத்தியை யும் உணர்த்துபவை. உமாமகேசுவர வடிவம் இத்தகையது. வள்ளி, தெய்வானை உடனிருக்கும் முருகனின் வடிவத்தில் தெய்வானை இறைவனின் கிரியா சத்தியையும், வள்ளி இச்சா சத்தியையும், வேல் ஞான சத்தியையும் குறிப்பன.

இறைவனைக் கணவனாகவும் இறைவியை மனைவியாகவும் கொள்வது உலகியல் நோக்கில் அமைந்தது. சிவனைத் தந்தையாகவும் முருகனை மகனாகவும் கொள்வதும் இத்தகையதே. இத்தகைய உறவுகளை விளங்குவதற்கு சைவ சித்தாந்த அறிவு பெரிதும் துணை செய்யும். அபிராமி அந்தாதியில் இறைவியைக் "கறை கண்டனுக்கு மூத்தவளே" என்று அபிராமிப் பட்டர் விழிக்கிறார். பராசத்தி சுத்தமாயையில் நின்று கொண்ட அருட்டிருமேனி நீலகண்டன் (கறைக்கண்டன்) என்னும் வடிவம். இதனால் பராசத்தியாகிய இறைவி கறைகண்டனுக்கு மூத்தவளாக பாடப்பட்டார்.

**அருவ நிலையில் உள்ள இறைவனால் செயற்பட முடியுமா?**

அருவ நிலையில் இருக்கும் உயிர் எமது புலன்களுக்குத் தெரிவதில்லை. ஆயினும் அது உடம்பை இயக்குகிறது. மின்சத்தி எமது கண் ணுக்குத் தெரியவதில்லை. ஆயினும் அது ஒளி யைத் தருகின்றது. இது போல புலன்களுக்குப் புலப்படாத அருவ நிலையில் உள்ள இறைவனும் தனது அருட்சத்தியை கொண்டு செயற்படுகிறார்.

**திருச்சிற்றம்பலம்**

மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை
(கலாநிதி க.கணேசலிங்கம்)

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்







**"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"**

### சமணர் கோயிலை அழித்து சிவபெருமானுக்கு திருக்கோயில் எழுப்பியமை

சிவபெருமான் எழுந்தருளிய பழையாறை என்னும் பதியைச் சேரச் செல்லும் பொழுது, வடதளி என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சிவலிங்கப்பெருமானைச் சமணர்கள் மறைத் திருத்தலைக் கேள்வியுற்று, அண்மையில் ஓரிடத் திற்சென்று, திருவமுது செய்யாமல் சுவாமியைத் தியானித்து, **"சுவாமி! அடியேன் தேவரீருடைய திருவுருவைக்கண்டு வணங்கியன்றிப் போகேன்,**







**அந்தத் திருவுருவை மறைத்த சமணர்களுடைய செய்கையைக் கெடுத்தருளும்"** என்று எம்பெருமானை வேண்டினார்.

அப்பர் பெருமானின் வேண்டுதலை எவ்வாறு எம்பெருமான் மறுப்பார். எனவே அதற்கிணங்க சிவபெருமான் அரசனுக்கு கனவில் தோன்றி, **"அறிவற்ற சமணர்கள் நம் கோயிலை மறைக்க நாம் அதனுள்ளே இருந்தோம் என்றருளி, அவ்விடத்தைக் காணக் கூடிய அடையாளக் குறிகளையும் அருள் செய்து, நம்மை நாவரசு வணங்குவதற்காக, நன்னெறியில் ஒழுகாத சமணர்களை அழித்து, அங்கிருந்து அகலச் செய்வாயாக!"** என்று அருள் செய்தார்.

மன்னனும் துயில் எழுந்து எம்பெருமானின் திருவருளை எண்ணி வணங்கினான். தான் கனவில் கண்ட வியப்பான காட்சியை அமைச்சர் களுக்குச் சொல்லி, அவர்களுடன் தானும் விரைவாய் அவ் விடத்திற்குச் செல்லலானான். கனவில் பெருமான் அருளிய அடையாளங்களின் வழியே சென்று, சிவ வடிவமான அப்பர் பெருமானை கண்டு, சமணராகிய கீழானவர்கள் செய்த வஞ்சனையை வெளிப்படச் செய்த நாவரசரின் திருவடிகளை வணங்கினார். தீவினை தாங்கியவர்களான சமணர்களை யானையால் மிதிப்பித்து கொன்று அவர்களின் வஞ்சனைகளை தகர்த்தான்.

அச்சமணர் பள்ளியை அழித்து, மன்னன் சிவபெருமானுக்கு உரிய விமானத்தையும் ஆக்கி உரியவாறு விளங்கச் செய்து, பெருமானை வழிபடுதற்கான பூசனைக்கு வேண்டிய பொருள் களையெல்லாம் அறக்கட்டளைகளாக வகுத்து அமைத்து கொடுத்தான். பின்னர் நாவரசரை வணங்கி, திருக்கோயிலினுள் அழைத்துச் சென்றான். ஞான வள்ளலான நாவரசரும் அக்கோயிலுக்குள் சென்று இறைவரின் திருமுன்பு நின்று போற்றுவாராய்,

**"தலையெல்லாம் பறிக்குஞ் சமண் கையரு
ணிலையினான் மறைத்தான் மறைக் கொண்ணுமே
யலையினாற் பொழி லாறை வடதளி
நிலையி னானடி யேநினைந் துய்ம்மினே"**

எனும் **"தம் தலை மயிரைப் பறித்தலும், நின்று உண்ணும் இயல்பும் கொண்ட கூட்டத்தவரான சமணர்கள் மறைத்தாலும், மெய்ம்மையுணராத அவர்கள் தம் சிற்றறிவினால் மறைத்து வைத்திட முடியுமோ!"** என்னும் கருத்துக் கொண்ட விலை மதிப்பதற்கரிய வாய்மையுடைய திருக்குறுந் தொகையைப் பாடியருளினார். பின்பு அங்குத் தங்கியிருந்த சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பிற பதிகளையும் வணங்கச் செல்லலானார்.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரச நாயனார் புராணம் (274 - 300)

சிவத்திரு. தென்னாடு நிலவன்

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு கற்பக வல்லியம்மை உடனுறை கபாலீசுவரர் திருக்கோயில் - திருமயிலாப்பூர் (கபாலீச்சரம்)

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 256 ஆவது திருக்கோயில் திருமயிலாப்பூர் (கபாலீச்சரம்))

**“வடிவுடைய மங்கையுந் தாமுமெல்லாம்
வருவாரை யெதிர்கண்டோம் மயிலாப்புள்ளே”**

உமாதேவியார் மயில் உருவமாய் இறைவனைப் பூசித்ததால் திருமயிலை என பெயர் பெற்றதும், திருஞானசம்பந்த பெருமான் எம்பெருமான் துணைகொண்டு அரவு தீண்டிய பூம்பாவையை உயிர்ப்பித்து அற்புதம் நிகழ்த்திய பேறுடைய திருத்தலமே கற்பக வல்லியம்மை உடனுறை கபாலீசுவரர் பெருமான் உறையும் திருமயிலை திருத்தலம்.

**அமைவிடம்: சென்னை மாவட்டம், தமிழ்நாடு**

சென்னையின் தென்பகுதியில் விளங்குவது இத்தலம். சென்னைக்குத் தெற்கே 6 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. சென்னையின் நகரப் பேருந்துகளில் அனைத்து இடங்களிலிருந்தும் மயிலாப்பூர் செல்லலாம்.

**இறைவர் திருப்பெயர்: கபாலீசுவரர்.**
**இறைவியார் திருப்பெயர்: கற்பகாம்பாள், கற்பக வல்லியம்மை.**
**கோயில் மரம்: புன்னை மரம்**
**தீர்த்தம்: கபாலி தீர்த்தம், திருக்குளம்.**
**வழிபட்டோர்: சம்பந்தர், அப்பர், சுந்தரர், ஐயடிகள் காடவர்கோன் நாயனார்,நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், அம்பிகை,இராமர் முதலியோர்.**
**பாமாலை: சம்பந்தர், அப்பர், நம்பியாண்டார் நம்பி.**

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**

**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

**மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.**
*(2-47)*

**சுந்தர மூர்த்தி நாயனார் அருளிய திருப்பதிகம்**

**கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.**
*(7-39-8)*

**நம்பியாண்டார் நம்பி அருளிய திருப்பதிகம்**

**மாறா அருளரன் தன்னை மனஆ லயத்திருத்தி
ஆறா அறிவாம் ஒளிவிளக் கேற்றி அகமலர்வாம்
வீறா மலரளித் தன்பெனும் மெய்யமிர் தம்கொடுத்தான்
வீறார் மயிலையுள் வாயிலான் என்று விளம்புவரே.**
*(11-33-62)*

### திருத்தலச் சிறப்பு

உமாதேவியார் மயில் உருவமாய் இறைவனைப் பூசித்த காரணம்பற்றி இப்பெயர்பெற்றது. இது மயிலாப்பு என்றும் தேவாரத்தில் கூறப்பெற்றுள்ளது. மயிலாப்பூர், மயிலாப்பு என்று வழங்கப்பெற்றிருப்பது, அப்பர் சுவாமிகளது திருஒற்றியூர்த் திருத்தாண்டகம் ஆறாம் திருப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. அப்பகுதி,
**“வடிவுடைய மங்கையுந் தாமுமெல்லாம்
வருவாரை யெதிர்கண்டோம் மயிலாப்புள்ளே”**
என்பதாகும். இதையே

**“மங்குல் மதிதவழும் மாடவீதி
மயிலாப்பி லுள்ளார் மருகலுள்ளார்”** எனக் கோயில்



புக்க திருத்தாண்டகத்திலும் காணலாம்.

முருகப்பெருமான் மயிலை நாதனை வழிபட்டுச் சத்திவேல் பெற்ற தலம். நான்முகன் பூசை செய்து தன் இறுமாப்பு நீங்கி தனது படைக்கும் ஆற்றலைப் பெற்ற தலம். நான் மறைகள் (வேதங்கள்) பூசித்ததால் வேதபுரி என்னும் பெயர் பெற்ற திருத்தலம். சுக்கிரன் பூசித்ததால் சுக்கிரபுரி என்னும் பெயரும் பெற்ற திருத்தலம். இராம பிரான் நேசித்துத் தங்கியிருந்து பூசித்துத் திருவிழா நடத்திய தலம். திருஞானசம்பந்தப் பெருமான் எலும்பைப் பூம்பாவையாக்கிய புகழ்தலம். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய வாயிலார் தோன்றிய தலம். பன்னிரண்டு ஆழ்வார்களில் மூன்றாமவராகிய பேயாழ்வார் பிறப்பெடுத்த பெருமைத் தலம். ஆளுடைய பிள்ளை - ஆளுடைய அடிகள் தேவாரம் பெற்ற திருத்தலம்.

சீர்த்திமிகு சிங்காரவேலன் கீர்த்திமிகு திருப்புகழைப் பெற்ற தலம். வான்புகழ் கொண்ட வள்ளுவர் புகழோடு தோன்றிய தொன்மைத் தலம். தைப்பூசம் இக்கோயிலில்





சிறப்பு பெரும். இந்நாளில் கபாலீசுவரரை வணங்கினால் பரமானந்த நிலை என்னும் பிறப்பற்ற நிலை பெறலாம் என்பது தொன் நம்பிக்கை.

### திருத்தல வரலாறு

உமையவள் சிவபெருமானிடம் ஐந்தெழுத்தின் பெருமைதனையும், திருநீற்றின் மகிமைதனையும் விளக்கிட வேண்டுகோள் விடுக்க, சிவபெருமான் அவ்விளக்கந்தனை நல்கிட, அதுபோது மயிலொன்று தோகை விரித்தாட, தேவியார் தமது கவனத்தை அதில் செலுத்தினார். அதனால் கோபமுற்ற சிவபெருமான், **“நீ பூதலத்தில் மயில் உருப்பெற்றிடுவாய்”** என சாபமிட்டார். **“சாபம் நீங்க தொண்டை நாட்டிற்கு சென்று தவம் செய்”** எனக் கூறினார்.

அவ்வாறே இத்தலத்தில் அமைந்துள்ள புன்னைமரத்தின் கீழ் சிவலிங்கத்தை பூசித்து அம்மையார் வழிபட்டார். அவர்தம் அரும் தவத்தின் மகிமையால் சிவபெருமான் தேவியின் முன் தோன்றி, **“மயிலாய் இருந்த பழி உன்னை விட்டகன்றது. கற்பகவல்லி என்பதான பெயர் உனக்காகுக”** என வரம் அருளினார். அச்சமயம் தேவியார் பரமனை நோக்கி அடியேன் இங்கு தவம் செய்து உயர்ந்ததால் இப்பகுதி **“மயிலை”** என பெயர் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பரமனும் அவ்வாறே அருளியதாக வரலாறு கூறுகிறது.

சிவனைப்போலவே நான்முகனுக்கும் ஐந்து தலைகள் இருந்தன. இதனால் தானும் சிவனுக்கு ஈடானவனே என்ற ஆணவம் நான்முகனுக்கு ஏற்பட்டது. நான்முகன் ஊழியில் அழிந்து மீண்டும் பிறப்பதால் அவர் நிலையில்லாதவர் ஆகிறார். சிவபெருமானோ ஆதியும், அந்தமும் இல்லாதவர். இதை உணராமல் நான்முகன் ஆணவம் கொண்டதால், அவரைத் திருத்த நினைத்த சிவபெருமான், அவரது ஒரு கபாலத்தை (தலையை) கிள்ளி கையில் ஏந்திக் கொண்டார். எனவே இவர், கபால ஈசுவரர் என்றழைக்கப்பட்டு கபாலீசுவரர் ஆனார். தலமும் கபாலீச்சரம் என்று பெயர் பெற்றது.

### திருக்கோயில் அமைப்பு

கிழக்கில் ஏழு நிலை இராசகோபுரம். தலமரம் புன்னை மரம் அருகே புன்னைவனநாதர் சந்நிதி உள்ளது. அம்பாள் மயில் வடிவில் பூசித்ததால் மயில் உருவமும் சிலையாக உள்ளது. இது, வாயிலார் நாயனார் தோன்றிய தலமாகவும், முத்தி தலமாகவும் உள்ளது, குருபூசை நாள்: மார்கழி - ரேவதி. வாயிலார் சந்நிதி கற்பகம்பாள் சந்நிதிக்கு எதிரில் வடக்குப் பார்த்த தனி ஆலயமாக உள்ளது. பூம்பாவை குடத்தினின்றும் தோன்றும் திருவுருவமும் பிள்ளையார் பதிகம் பாடும் திருவுருவமும் உடனாகத் தனிக்கோயிலாக வெளிச் சுற்றினுள் மேற்குக் கோபுர வாயிலை அடுத்து வடபுறம் அமைத்து வழிபடப் பட்டு வருவது வணங்கத்தக்கது.

பங்குனித் திங்களில் 10 நாள் பெருந்திருவிழா, அறுபத்து மூவரின் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. தைப்பூசத்தை ஒட்டிய நிறைமதி தெப்பத் திருவிழா இடம்பெறும். அன்று சிறப்பாகக் கபாலீசுவரருக்கு தேனால் திருமஞ்சனம் நடைபெறும்.

**மயிலாப்பூர் (பழமையான) கபாலீச்சுவரர் கோயில் பற்றிய குறிப்பு:** பழைய கோயில் இப்போது உள்ள Santhome Catherdral Church உள்ள இடத்திலுருந்தது.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 2000 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றை கொண்ட திருக்கரசை திருமங்கலாய் சிவன் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

ஈழத்திரு நாட்டில் தேவாரப்பாடல் பெற்ற திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆகிய தலங்களுக்கு முன்பே திருமங்கலாய் திருக்கரைசை எனும் இடத்திலுள்ள சிவாலயம் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்பொருட் சின்னங்களைக் கொண்டமைந்தது என்று பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் "இலங்கைத் தமிழர் வரலாறு- கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### சிவாலய உற்பத்தி

இந்த சிவாலயம் பற்றி திருமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் சிறு கட்டுரையாக்கம் ஒன்றைச் செய்துள்ளனர். அவர்களில் பண்டிதர் இ. வடிவேல் எழுதிய "திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள்" என்ற நூலில் திருமங்கலாய் சிவன் கோயில் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"தற்போது இந்த ஆலயம் அழிந்த நிலையில் இருக்கின்றது. கருவறை சிதைந்து விட்டது. அர்த்த மண்டபம் சிதைந்த நிலையில் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. மகாமண்டபமும், மற்றும் ஆலயக்கட்டிடங்களும் அத்திரவாரமட்டத்தில் சிதைந்து மண்ணில் மறைந்து கிடக்கின்றன."

மேலும் அவர் இங்குள்ள திருமங்கலாய் சிவனின் பெயர் கந்தலிங்கேச்சரர் என்றும் மகாவலிகங்கையில் ஆடி மறைமதியிலும், மகரத் திங்களிலும் தீர்த்தமாடி வழிபட்டு, திருக்கரைசைப் புராணம் படிப்பும் நடைபெற்று வந்தது என்றும், மகாவலிகங்கையின் பெருக்கால் இவ்வாலயம் அழிந்து காடாகி மூடிவிட்டது என்றும், இங்குள்ள திருவுருவங்கள் மூதூரிலுள்ள பிள்ளையார் கோயிலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மற்றவர் திருமலையைச் சேர்ந்த வைத்தியகலாநிதி அ.சதீஸ்குமார் அவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழா மலரில், பண்டிதர் இ. வடிவேல் ஐயாவின் குறிப்புக்களை ஆதாரம் காட்டி இவ் ஆலயம் ஆய்வு செய்யப்பட வேண்டும், மீளவழிபாடு செய்யும் பொருட்டு புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற ஆவலை முன்வைத்திருந்தார்.

இத் தலத்தைப் பற்றிய ஓர் புதிய அத்தியாய வரலாற்றைத் தொல்லியல் ஆய்வுகள் மூலம் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் "இலங்கைத் தமிழர் வரலாறு - கிழக்கிலங்கையில் நாகரும் தமிழரும்" என்ற நூலில் "திருக்கரசையில் நாகர் அமைத்த கோயில்" என்ற தலைப்பில் தன் ஆய்வு அனுபவ ஆக்கத்தினை எழுதியுள்ளார். இது வரைகாலம் இத்தலம் பற்றிய தொல்லியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை என்ற ஆதங்கம் இவருடைய ஆய்வுகளினாலும், பேராசிரியர் தமிழர் மீதும் சைவத்தின் மீதும் கொண்ட பேரார்வத்தாலும் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்று கூறப்படும் நாகர் வம்சத்தினர் வாழ்ந்த இடமாக திருக்கரசை விளங்கியுள்ளது. அதுமட்டுமன்றி அவர்கள் மிகுந்த பலமும் வளமும், சமயப்பற்றும் கொண்டவர்களாக பல தலைமுறைகளாக ஆட்சிபுரிந்துள்ளார்கள் என்பது அங்கு கிடைத்துள்ள ஏராளமான தொல்பொருட் சின்னங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திருக்கரசையில் சிவாலயம் உருவாக்கப்படுவதற்கு முன்பு நாகவழிபாட்டுத் தலம் ஒன்று இருந்தமையை அங்கு கிடைத்துள்ள நாகவழிபாட்டுச் சின்னங்கள் மூலமாக அறியமுடிகின்றது. இதே போல நாகர்கள் ஆட்சிபுரிந்த அம்பாறை (காரைதீவு), கந்தரோடை, மாவிட்டபுரம் போன்ற இடங்களில் காணப்படும் நாகச்சின்னங்களும் இதற்குத்தக்க சான்றுகளாகும்.

திருக்கரசையில் கிடைத்துள்ள வெள்ளை நிறமான அரைவட்டக் கல்லில் "மணிணாகன்பள்ளி" என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அது கி.பி 2 ஆம் நூற்றாண்டுக்கு உரியது என்றும் நாகர் திருக்கரசையில் அமைத்த சிவன் கோயிலுக்குரியது என்றும் கொள்ளலாம் என்று பேராசிரியர் குறிப்பிடுகின்றார். இங்கு "மணிணாகன்" என்ற பெயர் சைவசமயக் கடவுளின் பெயராகவும், அதேவேளை நாக மன்னர்களுக்குச் சூட்டப்பட்ட பெயராகவும் இருந்துள்ளது. அக்காட்டினுள் மறைந்து கிடக்கின்ற கோயிலின் இடிபாடுகளுடைய பல வகையான தூண்கள் காணப்படுகின்றன. அவற்றின் சில தூண்களில் சிவனின் திரிசூலக் குறி பொறிக்கப்பட்டுள்ளது. மற்றும் இன்னுமோர் தூணொன்றில் மூன்று நாக மன்னர்களின் பட்டப் பெயர்கள்

**"வேள்ணாகன் மகன் வேள்கண்ணன்**
**வேள்கண்ணன் மகன் வேள்ணாகன்"**

என்று குறிப்பிடப்படுவதிலிருந்தும். நாகமன்னர்களுக்கும் சைவத்திற்கும் தொடர்புகள் இருப்பதை அறிந்து கொள்வதோடு திருக்கரசையில் உருவான சிவன் கோயில் அவர்களால் உருவாக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்துள்ளது என்பதையும் உணர முடிகின்றது.

இவ்விபரங்களை பேராசிரியர் தனது நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"சிவாலயம் அமைக்கப்படுவதற்கு முன்பு திருக்கரசை நாக வழிபாட்டுத் தலமாக விளங்கியதென்று கொள்ளமுடிகின்றது. நாக வழிபாட்டுச் சின்னங்களான கற்கள் சிலவும் இங்கு கிடைத்துள்ளன. ஆதியில் நாகவழிபாட்டினரான நாகர் காலப்போக்கில் சைவசமயத்தைப் பின்பற்ற முற்பட்டமைக்கும் இங்குள்ள தொல்லியற் சான்றுகள் ஆதாரமாகும். இருப்பினும் சைவசமயக் கடவுளரை அவர்கள் 'மணிணாகன்' என்ற பெயரால் குறிப்பிட்டமை. இவற்றினாற் புலனாகின்றது. இது பொது வழமையாகிவிட்டது என்பதை யாழ்ப்பாணத்திலும் வன்னியிலுமுள்ள கல்வெட்டுப் பொறித்த பல சின்னங்கள் மூலமாக அறிய முடிகின்றது"

இங்கு கிடைத்துள்ள தொல்பொருள் சின்னங்கள் எல்லாம் ஏறத்தாள 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கூறும் பேராசிரியர், தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட குறிப்பாக "மணிணாகன்" என்னும் பெயர் பொறிக்கப்பட்ட நந்தியின் கல்லுருவம் அங்கு இருந்ததாகவும், அது தற்போது அங்கில்லை என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் அவர், அங்கு கிடைத்துள்ள சிவலிங்க வடிவம் மிகவும் தொன்மையானது. அதன் நடுப்பகுதியில் "மணிணாகன்" என்ற பெயர் பொறிக்கப்பட்டு இருப்பதையும் அவதானித்து 'தென்னாசியாவிலே கிடைக்கின்ற மிகவும் புராதனமான சிவலிங்கங்களில் இதுவும் ஒன்றாகும்' என்கின்றார். ஆகவே இங்குள்ள நந்தியும் சிவலிங்கமும் ஒரே காலத்தவை ஆகையால் அவ்விரண்டும் ஒரே கோயிலுக்குரியவை என்றும் தனது நூலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"கோயிலின் உடையாரையும், நந்தியினையும் மணிணாகன் என்று பெயரிட்டுள்ளமை புதுமையானது. இது தென்னிந்தியப் பண்பாட்டு மரபிலும் ஈழத்து சைவசமய வரலாற்றிலும் இதுவரை வெளிவராத விடயமாகும்"

### திருத்தல புராணம்

திருகோனமலையின் தலச்சிறப்பினை எடுத்தோதும் புராணங்களில் தட்சிணகைலாச புராணம், திருக்கரசை புராணம், திருக்கோணாசல புராணம் ஆகிய மூன்றும் தனிச்சிறப்புப் பெற்றவை. இவற்றுள் திருக்கரசை புராணம் திருமங்கலாய் சிவன் மீது பாடப்பட்ட தலமான்மியமாகும். இதன் நூலாசிரியர் பற்றியும், இது உருவான காலம் பற்றியும் உறுதியாகக் கூறுவதற்கு ஆதாரங்கள் இது வரை கிடைத்தில. இப்புராணத்தில் நான்கு சருக்கங்கள் உள்ளன. இன்றும் இப்புராணம் கொட்டியாபுரப்பற்றிலுள்ள பல சைவக் கோயில்களில் பாராயணம் செய்யப்பட்டும் வருகின்றது. இந்நூல் திருமங்கலாய் சிவன் கோயில் வரலாற்றுடனும், அதன் அருகாமையில் உள்ள அகத்தியர் திருக்கோயில் உடனும் தொடர்புபட்டது. கங்கை, தாபனம், பூசை ஆகிய சருக்கங்களிலே சூரியகுலத்தில் உதித்த அயோத்தி புர அரசன் சிங்கபுயன் ஈழத்தீவை வந்தடைபோது, அக்காலத்தில் திருமங்கலாயில் இருந்தவாறு ஆட்சி புரிந்த எழில்வேந்தன் எனும் மன்னனின் மகளாகிய திருமங்கை என்பவளை சிங்கபுயன் மணம் முடித்து இவ்விடத்தையும் ஆட்சிபுரிந்து, அங்கு ஒரு சிவன் கோயிலும் கட்டி பூசை புரிந்து வழிபட்டனர். அதனால் திருமங்கலாய் சிவன் கோயில் என வழங்கப்படலானது. பின்பு அகத்திய முனிவர் அமைத்த கோயிலையும் புதுப்பித்து பூசை புரிந்ததாக கூறப்படுகின்றது.

ஆகவே ஆரம்ப காலத்தில் திருக்கரசையம்பதியில் இரு சிவாலயங்கள் மன்னர் ஆதரவுகளுடன் பூசை வழிபாடுகளுடன் சிறப்புடன் நல்நிலையில் இருந்துள்ளதை அங்கு கிடைத்துள்ள தொல்லியல் சான்றுகளும், திருக்கரசை புராணமும் எடுத்துக் கூறுகின்றன. இவ்விரு சிவாலயங்களும் ஈழத்தின் மிகப் புராதனமான சிவத்தலங்கள் எனக் கொள்ள இடமளிக்கின்றன. தற்காலத்தில் இவ்வாலயங்களில் முழுமையை எம் கண்ணால் கண்டு வணங்க முடியாத அவல நிலைக்குள்ளாகியுள்ளோம். இவ்ஆலயங்கள் முற்றாகச் சிதைவடைந்து அதன் ஏராளமான பாகங்கள் காடாலும் புற்களாலும் மண்ணாலும் மூடப்பட்டு மெல்ல மெல்ல இறந்து கொண்டு வருவதை சைவர்கள் யாவரும் உணர வேண்டும். மீண்டும் உயிர்ப்புடன் இவ்வாலயங்கள் புதுப்பிக்கப்பட்டு தமிழ் வேதாகம மந்திரப் பாடல்களோடும் பூசை வழிபாடுகளோடும் சுவாமிமலையில் தளைத்தோங்க திருமலைச் சைவச் சான்றோர்கள், இளைஞர்கள் முன்வரல் வேண்டும்.

**மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை**
**கூறுமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்**
**சாரும் திலை வனத்து தண்மா மலையத் தூடு ஏறுஞ்**
**சுழுமுனை இவை சிவபூமியே** - (திருமந்திரம் - 2701ஆம் பாடல்)

**திருச்சிற்றம்பலம்**






**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Rasa Rasa Cholan's Message

Rasa Rasa Cholan is an astounding figure whose identity has stood the test of time and is still known to millions of people close to a thousand years after his passing. He was a great leader of Chola Dynasty and rule majority of southern India and pockets of south-east Asia during the 10th and 11th centuries. Renowned for his military prowess and visionary leadership, he left an indelible mark on history through his ambitious architectural projects, notably the iconic Peruvudaiyar Kovil, and his patronage of literature, exemplified by the compilation of the Thirumurais. More importantly, it can be said that Rasa Rasa Cholan motivations and actions left a message to the world, setting a standard for future generations, us, to follow suit.

Rasa Rasa Cholan's most notable achievement and crowning glory was undoubtedly the Thanjavur Periya Kovil, a masterpiece of Tamil architecture that stands as a testament to human ingenuity and devotion. The mammoth structure constructed in the 11th century is a marvel that has withstood the complexities of time and still has the capacity to resonate with millions of people. This Temple acts as a pristine place of devotion and worship for many people providing them with a platform to be closer with god.Its colossal Vimana, intricate carvings, and spiritual sanctity have made it an enduring symbol of cultural and architectural excellence. However, not only is this temple an architectural marvel and a place of worship it's an echoing of the Rasa Rasa Cholan's commitment and legacy to creating something that has the ability to transcend generations while acing as a symbol representing the Tamil language, culture and history.

Further Rasa Rasa Cholan's impact on this world can be further highlighted through his role in obtaining the Thirumurais. During his rule only a few sacred verses of the Thirumurais had been known. But Rasa Rasa Cholan's passion and love for these sacred hymns motivated him to find all these literary masterpieces to spread the wealth of knowledge that had been written in them. Nambi Andar Nambi and the king himself recollected around 10% of all the Thirumurais from Chiddambaram Temple as the rest had been damaged by termites. Rasa Rasa Cholan's strong motivation to rediscover these Thirumurais has left a lasting impact on the lives of millions throughout history and even until this day. These Thirumurais have provided the world with great amounts of knowledge on god and even life itself and their sacred lines still continue to be sung today.

We will continue to acknowledge Rasa Rasa Cholan's legacy in many millennia to come,

however we should strive to think beyond, and truly reflect on his accomplishments. Only then must we ask ourselves: What are we building today that will withstand the passage of time whilst maintaining Tamil culture? In a world marked with rapid and ever-occurring changes, the legacy of this king challenges us to extend our vision beyond the present, and strive for contributions that last hundreds of life times. In the spirit of Rasa Rasa Cholan let us build, create and contribute to society with the mindset of leaving an impact on this world, that will last millennia. Only through such activities can we leave a legacy that will brighten the lives of the future just like how the legacy of Rasa Rasa Cholan continues to illuminate our past.

**கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி. - திருக்குறள் 390**

He is the light of kings who has there four things, beneficence, benevolence, rectitude, and care for his people. - Thirukkural 390

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva P.Abiram SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Shiva is called "Thirukkadaikappu". These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.



Sambanthar and Appar were once staying in Thiru veezhimizhalai. The temple is said to have got its name Thiruveezhimizhalai, as before it was built it was a forest filled with sandalwood, jackfruit and a plant named Veezhi and also because there was once a hunter named Mizhalai Kurumbar who lived here and offered the Veezhi plant to Sivan daily. It was in this town there was a big famine due to the lack of rain and many people were suffering. Sivan appeared in the dreams of both Sampanthar and Appar and told them that he will place some gold coins every day in the temple for them to buy food for the people of the town. The next morning both Sampanthar and Appar went to the temple and got the gold coins and fed the people, however Sampanthar's gold coins were worth less than Appar and so he couldn't feed as many people. Sampanthar then prayed to Sivan in the form of a hymn Vasi Theerave, which goes as follows.

**வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே.
இறைவ ராயினீர், மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே.
செய்ய மேனியீர், மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர், உய்ய நல்குமே.**

vaasi theeravae kaasu nalkuveer
maasin milalaiyeer aesa lillaiyae.
iraiva raayineer maraikol milalaiyeer
karaikol kaasinai muraimai nalkumae.
seyya meniyeer meykol milalaiyeer
paikol aravineer uyya nalkumae.

In English this translates to, Sivan in Milalai which has no blemish. grant me coins without discount in changing them. there is no reproach. Sivan who is the master! grant me the coins which are defective, in the proper manner, without defect. Sivan who is in Milalai where truth reigns! and who has a cobra with a hood! grant me some defectless coins to save me.

Sivan bestowed Sambanthar with gold coins that had the same value as Appar's coins and Sambanthar went on to buy more food for the people of the town who were suffering from the famine

# Kanthan Kavin Arumai (Sasdi)



Kanthan Kavin Arumai (Kantha Sasdi) is a very vibrant and spiritual festival celebrated by Tamil Hindus all over the world. This special festival consisting of six days, dedicated to lord Murugan, symbolizes the victory of good over evil and serves as a strong reminder of the power of devotion and faith.

You may wonder why Kanthan Kavin Arumai consists of 6 days? This is because, this is the time period where a fierce battle between lord Murugan and an evil demon called Soorapadman happened. This story first starts from when the evil demon Soorapadhman obtains a boon, making him virtually invincible. Empowered by his boon, he began to wreak havoc and pain to the people. The gods who seemed helpless, weren't able to subdue him. Yet, they went and asked for help from lord Shiva. In response to their pleads, lord Shiva opened his third eye, located on his forehead. This created an amazing blessing to all the people, giving birth to lord Murugan. He was born in a pond full of lotus flowers and was granted six divine faces. He had six celestial mothers raise him, known as the Karthikey penngal. Hence, he received his other name, Karthikeyan. Lord Murugan grew very quickly and was in everyone's hopes of defeating the evil demon. His Mother, lord Parvathi gifted him with a Vel (spear) to fight the battle with and soon the lord embarked on his mission to destroy the forces of evil. The battle happened in a time period of six days. Although, in the war it was not only Soorapadman by himself. His two brothers, Gajamukhasuran and Simhamukhan also accompanied him in the battle. Firstly, Soorapadhman sent his brother Gajamukhasuran to fight. Although, he was unable to defeat lord Murugan and had been killed. Soorapadhman then sent his second brother Simhamukhan. Although, yet again, he was killed by the lord. This all made Soorapadhman very angry, and he finally headed off to fight the lord. In the last day, when the battle was about to end Soorapahdman used his evil magic and transformed into a mango tree. Although, lord Murugan knew he had done this and used his Vel to split the tree into two halves. One half was a peacock which became his vehicle and the other one was a rooster which became his flag. This marked the end of everyone's pain and sorrows, and a new era of worship to lord Murugan begun.



மாதுலன் சதீசன்
ஆண்டு 8
பேர்த் - ஒசுத்திரேலியா

This festival commences on the first day of the waxing moon in November. During Kanthan Kavin Arumai poojas are consistently happening in temples, along with people singing Kanthan Kavin Arumai Kavasam. Kantha Sasdi Kavasam is a devotional hymn dedicated to lord Murugan. It is widely recited on the days of Kanthan Kavin Arumai by devotees seeking the blessing and protection lord Murugan. Along with these activities, people also fast during these six days. They all hope for the lord Murugan to fulfill all their desires and bless them and protect them by fasting.

In Conclusion, Kanthan Kavin Arumai is an auspicious festival celebrated by many Tamil Hindus across the world. Kanthan Kavin Arumai happens for six days, which is the duration of time when the battle between Surapadhman and lord Murugan occurred.

(The facts and stories are from writer's view, since Thennadu is promoting kids to contribute we don't' change drastically to align with our Philosophy, with time we will help them to improve the article to align with our philosophy)

# Padal Pettra Thalam - Thiruketheeswaram



The Thiruketheeswaram temple commonly referred to as the Ketheeswaram temple is an ancient Saiva temple situated in Mannar in northern province of Sri Lanka. This temple is known to be one of the island's Pancha Eecharam ( A group of five coastal temples which were built around the perimeter of Sri Lanka), that were dedicated to Lord Siva. Thiruketheeswaram temple is one of the 275 Thevara Thiru - thalangal of Sivan, glorified in the poems of the Thevarams .The temple overlooks Some of the ancient Tamil port - towns which includes Manathi and Kudiramalai.

Thiruketheeswaram temple is an extremely old temple which is said to be around 2400 years old although the exact date of it's creation is unknown.It thrives beside the buried city of Mathottam a ancient Saiva city and a central trading place for ancient trades. However, this temple is one of the many temples which has experienced destruction and creation as when the Portuguese attacked in the 16th century many of the temples and cultural sites were destroyed. Nearly 400 years later the temple was reborn in the 20th century by the Thiruketheeswaram restoration committee in the 1950s.


The legend of its temple connects to the sagar manthan also known as the churning oceans. which is recounted in the Bhagavat Purana and the Vishnu Purana as well as the Mahabharata. Among the many treasures yielded by the churning, the most prized is amrita, the nectar of immortality, which was claimed by the devas after a victorious battle with the asuras.When the nectar was being distributed a asura came and sat in the row of the devas as soon as vishu realised this he cut himself into two pieces with his discus however having taken the nectar he was already immortalised. The two patriots of his body which we know today are known as Rahu and Ketu. The former is a head without a body and the latter is the headless body. It is believed that Ketu worshipped Lord shiva first and built a Sivalingam first hence the name Thiruketheeswaram temple. Every year, during sivarathri the temple comes alive with light and sounds to celebrate the reverence of Sivan. (These are from the writer's view , since Thennadu is promoting kids to contribute we didn't change much or edit this)



Aran Sivasuthan
Grade 6
Sydney

Furthermore, many poets have written about this temple and is even praised by Nayanmar Suntharar in late 7th century period as well as Sambanthar in the 6th century CE ever since then many people have praised this temple for its enduring lifeline and structure that eventually this became a popular tourist attraction. In fact, even a Chinese explorer mentioned this very temple in his journal. Nowadays many people visit this place from all around the world to experience its vast history. Resilience is a muscle which is forged in the fires of adversity and is shown through the persistence and reconstruction of Thiruketheeswaram temple.

# நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்





சிவ.யதோட்சயன் மங்களேச்வரன்
தரம் 11,
யாழ் மத்திய கல்லூரி

நாவலர் பலர் நாடெங்கும் தோன்றிப் புகழ் பெற்று வந்தமையை நாமறிவோம். அவரனைவரும் நாவன்மை ஒன்றையே நமக்குரிய தகுதியாய்க் கொண்டிருந்தனர். ஆனால் ஊழிப்பெயரினும் தாம் பெயராத சான்றான்மையும் தோலாத நாவன்மையும் ஒருங்கே பெற்றுப் புகழ் நிறுவியவர் யாழ்பாணத்து நல்லை ஆறுமுக நாவலர் ஒருவரேயாம். அப்பெரியார் நாவலர்கள் நடுகண் நாயகமணியாய்த் திகழ்ந்த அருமை அவர் தம் வாழ்க்கை வரலாறு “நல்லை நாகராறுமுக நாவலர் பிறந்திலரேல் “ என்ற புனைபெயருடன் எழுதப்பட்டுள்ளது.

ஞானப்பிரகாச சுவாமிகள் என்பர் யாழ்ப்பாணத்து நல்லூரரைச் சார்ந்த திருநெல்வேலியிலே தோன்றியவர். தொன்மை மிக்க பண்டியர் மழவர் குடியைச் சார்ந்தவர். போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்திலே வாழ்ந்தவர் பிறந்த குடிக் கேற்பப் பழுத்த தமிழ்ப்புலமையுடையவர். சிவனை மறவாத சிந்தையார். மழவர் என்ற சொல்லுக்குப் பொருத்த மனவலிமையும் படைத்தவர் இத்துனைச் சிறப்புடைய பெரியாரையும் போர்த்துக்கேயர் தலைவன் வாளாவிருக்க விடவில்லை. அத்தலைவனின் உணவின் பொருட்டு யாழ்ப்பாணத்து மக்கள் நாடோறும் ஒவ்வொரு பசுவினைக்கொண்டு வர வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தான். அக் கட்டளையை மறுக்க முடியாதவர்களாய் அஞ்சியவர்கள் தம் சமய ஒழுக்கத்தையும் வழுவி நிறைவேற்றி வந்தனர் ஆனால் ஒழுக்கம் பழுத்த சைவ மரபிலே வந்த அடிகளார். இச்செயல் செய்ய ஒருப்படுவாரோ? முதல் நாளிரவே யாருமறியா வண்ணம் வெளியேறினார். யாழ்ப்பாணத்தினின்றும் நீங்கித் தில்லையை அடைந்தவர். திருவருளை நினைத்து “உய்ந்தேன் உயர்ந்தேன் “எனச் சொல்லி மகிழ்ந்தார்.

என்னே இவர் தம் துணிவு ஒழுக்கமே உயர்குலம் எனக் கருதும் இவரென்றோ உயர்ந்தவர்! திருமூலர் அருளிய திருமந்திரத்தை ஓதும் இவரோ ஆவினை கொன்றுண்ண உய்ப்பர். பிறவுயிர்க்கு வரும் சிறு துன்பத்தையும் தமக் கேற்பட்டதெனக் கருதும் பிறழா நோன்பினரன்றோ இவர், “அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் மற்றும் அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை” என்னும் வான்புகழ் வள்ளுவமொழி அறிந்தவரன்றோ? ஆகவே போர்த்துக்கேயத் தலைவன் ஆணைக்கஞ்சி ஆவினைக் கொடுத்தலினும் வேற்றிடம் சென்று எத்துணை இடுக்கட்படினும் நன்றே எனக் கருதியே அவன் ஆணையை நிறைவேற்றா தொழிந்தார்.

ஒரு பசுவினைக் கொடுத்து மனை மக்கள் சுற்றமுடன் தாயகத்து இன்பமாக வாழத்தெரியாத பைத்தியக்காரர் என்று பனிப்பவருமுனர். ஆனால் ஒழுக்கமே கோயிலிலும் மேலானது என்று இம்மை இன்பமெல்லாம் துறந்த இவரோ பைத்தியக்காரர் இல்லை உயர்ந்தவர் இவரே! கொள்ளைக்காக உயிரையும் வெறுத்தவர் இவரே! இவரே தெய்வப் பிறவி! மனிதருள் மாணிக்கம்! அவர் வாழ்வு என்னவாயிற்று என்பதைக் காண்போம்.

யாழ்ப்பாணம் நீங்கிச் சிதம்பரமடைந்த ஞானப்பிரகாசர் சில ஆண்டுகள் தங்கி வாழ்ந்தபின் வடநாடு சென்றார். ஆங்கே வடமொழிப் பண்டிதர்களை அணுகிப் புலமை பெற்றார். தமிழிலும் வடமொழியிலும் புலமை அடைந்த அவர் மீண்டும் தமிழகம் சேர்ந்தார். திருவண்ணாமலைக் குன்றக்குடி ஆதீனம் சென்று துறவு பூண்டார். அவ் ஆதீனத்தின் ஆதரவில் வாழ்ந்து வரும் நாளில் செய்த சைவ சமயத் தொண்டுகள் அளப்பரியன தமிழிலுள்ள சித்தாந்த நூல்களையும், உரைகளையும் வடமொழியில் பதித்தார். சிவஞான சித்தியார் என்ற சமய சாத்திர நூலிற்கு நல்ல உரை வரைந்தருளினார். இன்னும் சிதம்பரத்திலுள்ள திருக்குள வந்தவர்க்கெல்லாம் ஞானப்பிரகாசர் திருப்பெயரைச் சொல்லா நிற்கின்றது. தீதும் நன்றும் பிறர் தர வாராவன்றே? அடிகளாருக்கு போர்த்துக்கேயத் தலைவனால் நேர்ந்த தீங்கே நன்மையாகி முத்தியின்பம் எய்தக் காரணமாயிற்று. “ நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே” என்ற மாணிக்கவாசகர் மாண்புறு மொழிகளே இவர் தம் வாழ்விற்கு இலக்கியமாயின அல்லவா?

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

# Eliminate Sin with Thirumurai – Vaasi Theerave Kaasu

Thiruchcitrampalam

Sivan appeared in the dreams of both Sampanthar and Appar and told them that he will place some gold coins every day in the temple for them to buy food for the people of the town. The next morning both Sampanthar and Appar went to the temple and got the gold coins and fed the people, however Sampanthar's gold coins were worth less than Appar and so he couldn't feed as many people. Sampanthar then prayed to Sivan in the form of a hymn Vasi Theerave, which goes as follows.

1. Vaasi theeravē, kaasu nalkuveer;
maasu il Milalaiyeer; ēsal illaiyē

2. Iraivar aayineer; maraikol Milalaiyeer;
karaikol kaasinai, muraimai nalkumē

3. Seyya mēniyeer; meikol Milalaiyeer;
paikol aravineer; uyya nalkumē.

4. Neeru poosineer; ēru athu ērineer;
kooru Milalaiyeer; pērum arulumē

5. Kaaman vēva, ōr thoomak kannineer;
naama Milalaiyeer; sēmam nalkumē

6. Pinikol sadaiyineer; manikol midarineer;
anikol Milalaiyeer; panikondu arulumē

7. Mankai pankineer; thunka Milalaiyeer;
kankai mudiyineer; sankai thavirminē


8. Arakkan neritara, irakkam eythineer;
parakkum Milalaiyeer; karakkai thavirminē.

9. Ayanum Maalumaai muyalum mudiyineer;
iyalum Milalaiyeer; payanum arulumē.

10. Parikol thalaiyinaar, arivathu arikilaar;
verikol Milalaiyeer; pirivatha ariyathē.

11. Kaalimaa nakar vaali Sampanthan,
Veelimilalai mēl thaalum molikalē.

Thiruchcitrampalam



# Does the Lord Almighty exist?
# Scenic beauty on the way from Temple



Last month Summary:

Sivakan , a 7 year old kid, went to a temple festival with kith and kin. After worshiping god , he went around a temporary fair specially arranged for the festival to buy toys. He bought different toys and paintings and was thinking about the creator of those.

Now,

We had to walk back about three kilometres from the temple to reach our village. The road was flanked by green fertile fields, interspersed with tall coconut groves and guava trees. The canopy of trees on both sides of the road shaded the whole path like an umbrella, protecting the traveller from the scorching sun.

We came to a small bridge across the river. The cool water is so crystal clear that the white sand on the riverbed is visible from above. On the way back there is a small dam. The dam water is channelised through many canals to enrich the fields, banana plantations and the tall coconut groves.

A range of sky-high blue hued mountains, clad in moving white clouds, is a breathtaking sight, on the north-western side. way home. I was engrossed in this beauty of nature, on the way home. Meanwhile, the items I bought in the temple fair reminded me of the shopkeeper's statements - the aero-plane was made by a carpenter; the print of the Mahatma with his spinning wheel was a photograph taken by a person and the picture of Lord Muruga was the work of a skilled painter.

All these three items are inert objects, and somebody was required to produce each of them. Then I asked myself, "How did this scenic beauty that I have been enjoying come to exist? Do they exist on their own without being created by anyone?"

These inert objects, once produced, do not undergo any change; nor do they grow in size, shape etc. But it is obvious that these trees, crops, and creepers are seen to be constantly growing. Is there someone who is responsible for their creation, nourishment, and maintenance? Thus, thinking I reached home. This line of thinking continued even after reaching home.

Who built this house? Carpenters, mason, blacksmith, and others built this house. If that's the case, this world which can be considered as a huge house should also have been created by somebody, isn't it ? Where is his abode? Is it possible for me to know him at all?' so ran my thoughts.

Since I was engrossed in thinking, throughout the return journey I had not uttered a single word to anyone. My parents were really surprised at my silence, despite having got all that I wanted to buy.

Saiva Philosophy Reference: That which exists has no action without an actor; world is a created entity, and it has a creator - (Ullatharku Seyvonindri...)' - Sivajnanan Botham 1, Aphorism 2 is explained in this story.

# தென்னாட்டு நிகழ்வுகள்



மங்களநாதர் திருக்கோயிலில் கழுவாய் வழிபாடுகள் (25-11-2023)



தென்னாட்டில் கார்த்திகை வளர்பிறை கழுவாய் வழிபாடுகள் (25-11-2023)



ஒன்பானிரவு சிறப்பு வழிபாடுகளும் ஏடு தொடக்குதலும் (24-10-2023)



திருமூலர் குருபூசையுடன் ஐப்பசி நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (28-10-2023)





அமரர் கந்தையா பத்மநாதன் அவர்களின் முதலாம் ஆண்டு திதி வழிபாடு (05-11-2023)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் முப்பத்து ஒன்பதாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நளி நல்லோரை கார்த்திகைத் திங்கள் 11ம் நாள் நிறைமதி அன்று (27-11-2023 திங்கட்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org